MISCELLANEOUS ESSAYS

T. A. Kanakasabhapathy Mudaliar

6628 T

THE MADURA TAMIL

பல்வகைக் கட்டுரைகள்

பல்வகைக் கட்டுரைகள்

THE MADURA TAMIL SANGAM

தை. ஆ. கனகசபாபதி முதலியார்
இயற்றியது

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி
ஜார்ஜ் டவுன், சென்னை

பதிப்புரிமை] [விலை அணா 14

1936

பொருளடக்கம்

		பக்கம்
	முகவுரை	
1.	தொழிலும் தொழில் செய்வோரும்	1
2.	கல்வியைப்பற்றிய சில கருத்துக்கள்	8
3.	மலைமீதொருநாள்	20
4.	உரையாளரும் அவைக்களமும் ...	25
5.	இலக்கியப் பயிற்சி	33
6.	ஒரு தூரியத்தின் சுய சரிதம் ...	53
7.	துன்ப மலை	63
8.	சென்னைக் கடற்கரையின் காட்சி ...	69
9.	இந்தியரும் சிற்பக் கலையும்	75
10.	செஞ்சிக் கோட்டை	79
11.	வழியில் ஒரு பெரியார்	88
12.	நோயின் காரணம்	91
13.	நாடகக் கலை	105
14.	கவிஞரும் வீரரே—திருவள்ளுவர் ...	113

முகவுரை

நந்தமிழ் மொழியில் உரைநடை நூல்கள் மிகச் சில. அவற்றுள் கட்டுரை நூல்கள் இத்தனை என்று எண்ணிவிடும் நிலையில் இருக்கின்றன. அடிசன், ரஸ்கின், கார்லைல், மார்லி, எமர்சன் முதலியோர் எழுதிய கட்டுரைகளை யான் படித்தபொழுது தமிழ் மொழியிலும் பல கட்டுரைகள் எழுத வேண்டுமென எண்ணினேன். அவ்வெண்ணத்தால் யான் பெரிதும் தூண்டப்பெற்றுப் பல கட்டுரைகள் எழுதினேன். அவற்றுள் சில பள்ளிக்கூட வெளியீடுகளிலும், வார வெளியீடுகளிலும், பாட புத்தகங்களிலும் வெளிவந்தன.

அக்கட்டுரைகளையும் இதுவரையிலும் வெளிவராதிருந்த மற்றவற்றையும் சேர்த்து இன்று யான் ஒரு நூலாக வெளியிடுகின்றேன்.

இந்நூலை மாணவர்க்குப் பயன்படுத்தும் முகத்தால் அறிஞர் எனக்கு இத்துறையில் ஊக்கம் அளிப்பாரென்று யான் நம்புகின்றேன்.

சென்னை,
20-11-'36.

தை. ஆ. க.

பல்வகைக் கட்டுரைகள்

---

1. தொழிலும் தொழில் செய்வோரும்

இறைவனாற் படைக்கப்பட்ட இப்பேருலகி னில், சில நாடுகள் சிறப்புற்றும் பல நாடுகள் சிறப்பற்றும் இருத்தலை நாம் காண்கின்றோம். இதற்கு முக்கிய காரணம் அந்தந்த நாடுகளின் நீர் நில வளப்பங்களே என்பர் பலர். உண்மை யில் அவைகள் முக்கிய காரணமாயின், நாடுகள் ஒருகால் பிறநாட்டு மக்களால் உயர்வாகக் கருதப் படுதற்கும், மற்றொருகால் தாழ்வாகக் கருதப் படுதற்கும் நியாயமில்லை. ஆதலின், அந்தந்த நாடு களின் உயர்விற்கும் தாழ்விற்கும் அங்கங்குள்ள மக்களின் உழைப்பும் உழைப்பின்மையும் காரண மாகின்றன. அல்ல எனில், பாலைவனங்கள் மக்கள் வசதியாய் இருத்தற்குரிய இடங்கள் ஆதற்கு வழியில்லை. அதனாலன்றோ நந்தம் மூதாட்டியா ராகிய அவ்வையார்,

> 'எவ்வழி நல்லவர் ஆடவர்
> அவ்வழி நல்லை வாழிய நிலனே!'

எனக் கூறியுள்ளார்.

நாடுகளின் முன்னேற்றத்திற்கு மக்களே காரணமாயினும், பல்வேறு நல்லியல்களை அவர்கள் பெற்றில்லாவிடின், அவர்களால் அவர்கள் நாட்டிற்கு ஒரு பயனும் இல்லை. ஆதலின் அந் நல்லியல்களிற் சிலவற்றை இங்குச் சுருங்கக் கூறுவாம் :

தொழிலாளர் கொள்ளும் உணவின் தன்மையும் அளவும் அவர் செய்யும் தொழிலின் தன்மைக்கும் அளவுக்கும் காரணமாகின்றன. நுட்பபுத்தியினால் வேலை செய்ய வேண்டுபவர் கொள்ளும் உணவின் தன்மையும் அளவும் வேறு; முரட்டுத்தனமான வேலைசெய்ய வேண்டுபவர் கொள்ளும் உணவின் தன்மையும் அளவும் வேறு. இருதிறத்தாரும் தம்முள் இவற்றை மாற்றிக்கொள்வாராயின், தாம்தாம் செய்யக் கருதிய வேலைகளைச் சரிவர இயற்றல் இயலாது. பின்னும், அவர் தத்தமக்கேற்ற உணவுகளைப் போதுமான அளவு உண்ணாராயின், அரைகுறையான வேலைதான் செய்தல் இயலும். ஏனெனில், உண்ட உணவு கஷ்டப்பட்டு வேலை செய்தற்குப் போதுமான இரத்தத்தை உண்டாக்காமையின், அன்னார் தாம் கைக்கொண்ட வேலையை இனிது இயற்றுதற்கு ஏற்றவராகாமற் போகின்றனர். அளவுக்கு மிஞ்சி உண்போரும், தகுதியற்ற உணவினை உண்போரும் சிறந்த தொழில்களைச் செய்தற்குத் தகுதியுடையவராகார்.

சுத்தமான காற்றில்லாத இடங்களிலும், வசதியற்ற இடங்களிலும் வசிப்பவர் பெரும்பாலும் ஏதாவது ஒருவகையான நோயால் வருந்துவர். அங்ஙனம் உடல்நலங் கெட்ட மாந்தர் தாம் மேற்கொண்ட வேலையை இனிது ஆற்றுதற்கு உரியவர் ஆகார். ஏனெனில், நோயற்ற உடம்பு உடையார்க்கே சலனமற்ற மனம் அமையும்.

தொழிலாளர் தம்முன்னோரிடம் பெற்ற தேகவன்மையே அன்னார் சிறந்த தொழிலைச் செய்தற்கு ஊன்றுகோலாகின்றது. உணவின் தகுதியினாலும், சுகாதார அமைதியினாலும் உண்டாகும் தேகவன்மை இதற்கு ஒப்பாகாது. எனினும், பொற்பாவைக்குப் பொட்டுப் பின்னும் அழகைத் தருவதுபோல, இயற்கை வன்மையோடு செயற்கைவன்மையும் சேருமாயின், பெருவன்மை உண்டாகும் என்பதற்கு ஐயமில்லை. ஆதலின், இருவகையாலும் வன்மை பெற்ற உடல்நலம் வாய்ந்த தொழிலாளர் எத்தொழிலையும் சிறந்த வகையிற் செய்யக்கூடிய வல்லமை உடையவராவர்.

மேற்கூறிய வகையால் தேகவன்மையைப் பெற்றவர் நல்லொழுக்கத்தைக் கையாளாராயின் நாளடைவில் அவர் தம் தேகவன்மையை இழந்து, எத்தொழிலைச் செய்தற்கும் உரிய

வராகார். அன்றியும், அவர்க்குப் பிறக்கும் மக்கள் பிறக்கும் பொழுதே நோயுடையவர்களாயும், ஊனமுடைய கண் முதலியன உடையவர்களாயுமிருப்பார்கள். ஆதலின், ஒழுக்கமற்றவர்கள் நாட்டிற்கு ஒரு நன்மையும் செய்யாதொழிவதோடு, தங்கள் மக்களையும் பயனற்றவர்களாகச் செய்கின்றார்கள்.

சிறந்த தொழில் செய்தற்கு அறிவுடைமை மிகவும் முக்கியமானது. ஆதலால், சலனமற்ற மனமும், ஒரு விஷயத்தை விரைவாக அறிந்து கொள்ளக்கூடிய கூரிய புத்தியும், ஞாபகசக்தியும், ஒன்றினை உண்டாக்கத்தக்க அறிவும் அமையப் பெற்ற தொழிலாளரே பெருங்காரியங்களை இயற்ற வல்லவராவர்.

தொழிலாளர் தாம் மேற்கொண்ட வேலையைச் சுயமரியாதையால் தோன்றும் தன்னம்பிக்கையோடும் விருப்பத்தோடும் செய்வாராயின், அவர் தொழில் மிகவும் சிறந்து விளங்கும் என்பதற்கு ஐயமின்று. இவைகள் பெரும்பாலும் தொழிலாளர் தம் ஆக்கம் கருதி வேலை செய்யும் பொழுது காணப்படுவனவே அன்றி, பிறரிடத்துக் கூலிவேலை செய்யும்பொழுது காணப்படுவனவல்ல. ஏனெனில், தொழிலாளன் தனது சொந்தவேலையைச் செய்யும் காலத்தில், வேலை செய்யாமல் தான் கழிக்கும் ஒவ்வொரு நிமிட

மும் தான் தன் பிள்ளைகளுக்காகவும் தனக்காகவும் சேர்த்துவைக்கவேண்டுவதாகிய செல்வம் தடைப்படுதலை எண்ணி எண்ணி, வேலைசெய்ய முயல்கின்றான். அவன் பிறரிடத்திற் கூலிக்கு வேலைசெய்யுங் காலத்தில், தான் அதிகமாக உழைப்பதால் உண்டாகும் பயன் தன்னைச் சாராமையை மனத்திற்கொண்டு, தான் ஒப்புக்கொண்ட வேலையைச் செய்யவேண்டுவதாகிய கடமையையும், தான் வாங்கும் கூலி அளவுக்காவது வேலைசெய்யவேண்டும் என்பதையும் மறந்து, 'யார் என்ன சொன்னால் எனக்கென்ன!' என்று சுயமரியாதையையும் இழந்து, குறிப்பிட்ட கால அளவினை எதிர்பார்த்திருக்கின்றான்.

இவ்விதம் மக்கள் உணர்வு இருத்தலின், ஒவ்வொருவனும் தனக்கு வேண்டுவனவற்றைத் தானே செய்துகொள்ளுதல் வேண்டுமெனக் கருதுதல் தகுதியுடையதன்று. ஒருவன் உணவுக்காகப் பயிர்த்தொழிலையும், உடைக்காக நெசவுத் தொழிலையும், வசதியாய் இருப்பதற்கு ஏற்ற வீட்டை அமைத்துக்கொள்ளுவதற்காகக் கொல்லத்துவேலையையும், இன்னும் வாழ்க்கைக்கு வேண்டுவனவற்றைச் செய்துகொள்ளுவதற்காக மற்ற வேலைகளையும் கற்கத் தொடங்குவானாயின், அவனது ஆயுள் போதுமோ?

அன்றியும், அவற்றையெல்லாம் அவன் கற்கத் தொடங்கினும், அத்தொழில்களை எத்துணையளவு கற்க இயலும்? வெவ்வேறான தொழில் மாறுதலால் அவன் உடல் நிலையும் என்னாகும்? ஆதலின், ஒருவன் தனக்கு வேண்டுவனவற்றையெல்லாம் தானே செய்துகொள்ளுதல் இயலாது. அதனால், பலவிதமான வேலைகளைப் பலிராகச் சேர்ந்துதான் செய்தல்வேண்டும். பல கூலியாட்களை வைத்துக்கொண்டு செய்யப்படுகின்ற தொழிலில், மேற்கூறிய தன்மையுள்ள தொழிலாளரும் இருப்பராதலினால், நஷ்டம் ஏற்படுதல்வேண்டும். ஆனால், மேற்கொண்ட தொழிலை நன்றாகச் செய்தல்வேண்டும் என்னும் எண்ணமும், தொழில் செய்தலில் விருப்பமும், தாம் செய்கின்ற தொழிலிற் பிறர் குறை கூற இடந்தரக் கூடாது என்னும் சுயமரியாதையும் உள்ள சில தொழிலாளர் செய்யும் வேலையானது அந்நஷ்டத்திற்கு ஈடாகின்றது. எந்நாட்டில் இறுதியாகக் கூறப்பட்ட மக்கள் அதிகப்படுகின்றார்களோ, அந்நாடே செழித்தோங்கும் என்பது ஒருதலை.

மக்கட்குப் பெரிதும் துணைசெய்வனவற்றுள் தெய்வபக்தி சிறந்தது. இஃது ஒப்பற்ற ஒரு சஞ்சீவி; மனிதர்க்கு நிமிடந்தோறும் புத்துயிர் அளிக்கும் பேரமுதம். இதனைக் கைக்கொள்ளா மக்கள் எத்துணை அனுகூலங்கள் பெற்றவர்க

ளாயினும், ஒருவித அனுகூலமும் பெறுதவர்களே ஆவார்கள். அன்றியும், உலகமாகிய கடலுள், வாழ்க்கையாகிய மரக்கலத்தை நடத்தும் மாலுமியாகிய மனிதன், துன்பங்களாகிய பெரும் புயல்களுக்கு அடிக்கடி இலக்காகின்றுன். அச் சமயங்களிலெல்லாம் அவனுக்கு ஆதரவளித்துக் காக்கவல்லது தெய்வபக்தியென்னும் நங்கூரமேயன்றி வேறில்லே.

2. கல்வியைப்பற்றிய சில கருத்துக்கள்

மனித முயற்சியின்றி வளர்ந்துவந்த தாவரப் பொருள்களையும், சிறு சிறு விலங்குகளையும், பறவைகளையும் புசித்து மக்கள் ஆதியில் உயிர் வாழ்ந்துவந்தார்கள். மக்களின் தொகை பெருகிய பொழுது, இயற்கை விளைவு அவர்கட்குப் போதாமற்போயிற்று. அதனால், அவர்கள் நிலத்தைத் தோண்டிப் பண்படுத்தி, புல்லரிசிகளையும் தானியங்களையும் பயிரிடத் தொடங்கினார்கள். அவர்கள் உழைப்பால் அவைகள் பெரும் பயன் அளிக்கலாயின. ஆண்டுகள் செல்லச் செல்ல, மக்கள் பயிர் முதலியவைகளை இடும் முறையினை நன்கு உணர்ந்தார்கள். மக்கள் தொண்டினைப் பெற்ற தாவரங்களும், நன்றி மறவா நல்லோர் போன்று, அவர்கள் மனம் உவக்கும் விதம் பெரும்பயன் அளித்துவந்தன. தங்கள் உழைப்பால் உயர்ந்து நின்று, பூத்தும் காய்த்தும் காட்சி தந்த அப்பொருள்களைக் கண்டு மனமகிழ்ந்து, அவர்கள் அவைகளைத் தெய்வமெனப் பாடிப் புகழ்ந்தார்கள்; ஆனந்த மேலீட்டால் ஆடவும் ஆடினார்கள். அப்பாடலும் ஆட

லுமே நாளுக்கு நாள் வளர்ந்து காவியக் கலையும், நிருத்தக் கலையுமென முறையே மிளிரலாயின.

உழைப்பிற்கு ஏற்றவாறு, சில இடங்கள் மிகச் செழிப்புற்றும், சில இடங்கள் செழிப்பற்றும் இருந்தன. செழிப்பற்றிருந்த இடங்களிலிருந்த மாந்தர் செழிப்புற்ற இடங்களைக் கைப்பற்ற முயன்றனர். அதனால், ஓர் ஊரினர், மற்றவர் தமக்குத் துன்பம் செய்யாவாறு, அரண்பல வகுக்கவேண்டியவராயினர். நான்கு பேர் சேர்ந்தால் கருத்து வேற்றுமையும் வழக்குகளும் ஏற்படுமாதலால், அவைகளைத் தீர்த்துவைப்பதற்கு உரிய சபையும் காவலும் தொடரலாயின. உழைப்பில்லாத காலங்களில் மக்கள் மனம் நன்னெறி விட்டு விலகாவண்ணம், உலகமாகிய இப்பாடசாலையில் தாம் கற்றனவற்றையும், மக்கட்குப் பயன் தருவனவற்றையும் சேர்த்துச் சான்றோர் நூல்பல இயற்றினர். மக்கள் தொடக்கத்திலிருந்து நாகரிக வாழ்வை எய்தியவரையிலும் நாம் சுருக்கமாகக் கண்டோம். இது நிற்க.

கல் என்னும் வினைப்பகுதியிலிருந்தே கல்வி, கற்பு, கற்றல் என்னும் பதங்கள் தோன்றின. இம்மூன்றற்கும் பொதுவாகப் பொருள் ஒன்றே. கல் என்னும் பகுதி தோண்டு, கிண்டு என்னும் பொருள் பெறும். ஆதலின், கல்வி என்பதற்குத் தோண்டுதல் என்பது பொருள். இச்

சொல் மண்ணைத் தோண்டுதலை உணர்த்தும் பொழுது தொழிற்பெயர். பயிரின் விளைவிற்கு நிலம் பண்பெறுதல் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு அறிவின் விளைவிற்கு மனம் பண்ணுறல் முக்கியம். ஆதலின், மனம் பண்ணுறற்குக் கருவியாகிய ஆன்றோர் காவியங்களைப் பயிலுதலையும் முன்னையோர் கல்வி என வழங்கினர். அப்பொழுது அப்பதம் தொழிலாகுபெயராகும். மக்களுள் பெரும்பாலோர் உண்மை உணராது, கல்வி எனின் இலக்கியக் கல்வியையே கருதுவாராயினர். உண்ணும் உணவையும், அவசியமாக வேண்டுவனவற்றையும் கொடுக்க வல்ல தொழிற் கல்வியை அன்னார் கல்வியாகக் கருதிலர். இலக்கியக் கல்வி சிறந்ததாயினும், தொழிற் கல்வியோடு அளிக்கப்பட்டால்தான் அது மக்கட்கு வாழ்விற்கேற்ற பெரும்பயனை அளிக்கும்.

முன்னாள், இலக்கியக் கல்வியானது சில ஜாதியாருக்கும் செல்வந்தருக்குமே பயன் தருவதாய் இருந்தது. இரண்டொரு நூற்றாண்டுகளுக்கு முன், சில பெரியோர் மாந்தர் யாவருக்கும் இலக்கியக் கல்வி கொடுக்கப்படல்வேண்டும் என்று முயன்றனர். அதன் பயனாய் அக்கல்வியின் பயனை மக்களுள் பலர் அனுபவிக்கலாயினர். தொடங்கியவர்களின் நோக்கம் மிகத் தூயதாயினும், அக்கல்வியால் உண்டான நன்மையினும்

துன்பமே அதிகம். இலக்கியக் கல்வியைக் கற்கத் தொடங்கிய மாணவரில் நூற்றுக்கு எண்பது பேர் ஏழையரே. பிள்ளைகளுக்காகத் தாய்தந்தையர் தம் நிலங்களை விற்கலாயினர். கல்வி முறையோ, ஆரம்பக் கல்வி, கலாசாலைக் கல்வி, கல்லூரிக் கல்வி, ஆராய்ச்சிக் கழகக் கல்வி என நான்காக வகுக்கப்பெற்றது. ஆரம்பக் கல்வி, கலாசாலைக் கல்விக்குத் துணை செய்வதாயும், கலாசாலைக் கல்வி கல்லூரிக்கல்விக்குத் துணை செய்வதாயும், கல்லூரிக் கல்வி ஆராய்ச்சிக் கழகக் கல்விக்குத் துணைசெய்வதாயும் அமைக்கப்பெற்றிருக்கின்றன. ஆரம்பக்கல்வி கற்கும் மாணவரில் நூற்றுக்கு ஐம்பதுபேர்கூடக் கலாசாலைக் கல்வியை நாடுவதில்லை. கலாசாலைக்கல்வியை நாடிய மாணவருள் நூற்றுக்குப் பத்துப் பேர் கூடக் கல்லூரிக் கல்வியை நாடுவதில்லை. கல்லூரிக் கல்வியை நாடியவருள் நூற்றுக்கு ஒருவர் கூட ஆராய்ச்சிக் கழகக் கல்விக்கு முயல்வதில்லை. இந்நிலையில் கல்வி முறை வகுக்கப்பெற்றதனால், ஆரம்பக் கல்வியை நாடிய மாணவர்கள் அக்கல்வியில் தேறுவதற்குள் சுமார் பதின்மூன்று அல்லது பதினான்கு வயது அடைகின்றார்கள். இவர்களுள் கலாசாலைக் கல்வியைப் பெறாமல் நின்றுவிடுபவர்களுக்குப் போதியவளவு கல்வி இல்லாமையோடு, யாதொரு தொழிலுந் தெரியாது. அத

ளுல், இவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. எனி னும், இவர்கள் பதின்மூன்ருே பதினன்கோ வயதுள்ள சிறுவர்களாதலின், இவர்களுள் பெரும் பாலோர் விளைநிலங்களுக்கோ, தொழிற் சாலை களுக்கோ சென்று பிழைக்கத் தலைப்படுகின்ற னர். ஆனல், கலாசாலைக்குச் சென்று, கல்லூ ரிக்குச் செல்லாது நின்றுவிடும் மாணவர்களின் நிலை மிகவும் பரிதாப நிலையே. அவர்களுக்கு வயது குறைந்தது பதினேழு அல்லது பதி னெட்டு நிரம்பிவிடுகின்றது. இந்நிலையில் அவர் களுக்கு ஒருவகையாக எழுதப் படிக்கத் தெரி யுமே தவிர, வேறு ஒரு வேலையும் தெரியாது. அவர்கள் உத்தியோக ஸ்தலங்களில் எழுத்து வேலைக்குத் தகுதியுடையவர்களே அல்லாமல், வேறு எதற்கும் தகுதியுடையவர்களாகமாட் டார்கள். அவர்களுக்காகச் செலவிட்ட பணமோ, சொல்லும் அளவினதன்று. சில தாய்தந்தை யர் தம் செல்வத்தைத் தம் பிள்ளைகளைப் பற்ருக எண்ணிச் செலவிட்டிருப்பர். அப்பிள்ளைகளுள் பெரும்பகுதியினர்க்கு எங்குப் போனலும் வேலை கிடைப்பதில்லை. ஆரம்பக்கல்வி கற்றவரோ, கவு ரவம் பாராது தொழிற் சாலைகளுக்குச் சென்று, கைத்தொழில் கற்றுப் பிழைக்கின்றனர். கலா சாலைக் கல்விகற்றவர்களுக்குத் தொழில் செய் வது அவமானமான காரியமாகக் காணப்படுகின்

றது. இவர்கள், 'வேலை இல்லை! வேலை இல்லை!" என்று சொல்லிக்கொள்வதில் கவுரவம் காண்கின்றார்கள். பாவம்! பெற்றோரும் தம் பிள்ளைகள் நிலையைக்கண்டு வருந்துகின்றனர். கலாசாலைக்கு இவர்களை இவ்விதக் கல்விக்கு அனுப்பாமல் இருந்திருப்பின், பட்டினிக்கும் வருத்தத்திற்கும் வழி இல்லாமல் இருந்திருக்கும். கல்லூரி மாணவர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டுவதில்லை! கல்லூரியிலிருந்து தேறிய மாணவரில் நூற்றுக்கு ஐம்பது பேருக்கு வேலை கிடையாது. இக்கல்வியால் பெற்ற பயன் இதுவே. பள்ளிச் சாலைகளை அமைத்த காலத்திலிருந்த பெரியோர்கள், இலக்கியக் கல்வியே மற்றக் கல்விகளைக் காட்டிலும் மிகச்சிறந்ததெனக்கொண்டு, அதற்கே அரண் செய்யலானார்கள். அவர்கள் அன்று செய்த பிழையால், நம்மக்கள் இன்று பட்டினி கிடந்து வாடுகின்றார்கள்.

ஆதலின், நம் கல்வி முறை பெரிதும் மாறல் வேண்டும். பிரைமரிப் பாடசாலையில் படிக்கும் மாணவர்களுக்குத் தாய் மொழியோடு ஆங்கிலமும் கணக்கும் சொல்லிக் கொடுக்கலாம். அப்பிள்ளைகள் நன்றாக விளையாடல்வேண்டும். பாடசாலையில் அவர்கள் பல மணிநேரம் இருத்தலாகாது. பறவைகளைக் கூடுகளில் அடைத்து வைப்பதுபோல அவர்களை அடைத்து வைத்தல்

கூடாது. பின்னும் அவர்களை உபாத்தியாயினிமார் மேற்பார்வையில் வைப்பது பெரிதும் நலம்.

ஆருவது வகுப்பிலிருந்து எட்டாவது வகுப்பு வரையிற் படிக்கும் மாணவர்க்குச் சில மணி நேரம் கைத்தொழிலும், பல மணி நேரம் இலக்கியக் கல்வியும் கற்றுக்கொடுத்தல்வேண்டும். எல்லா மாணவர்களுக்கும் ஒரே விதமான வேலையைக் கற்றுக் கொடுப்பதில் பயனில்லை. எல்லா மாணவர்களும் ஒரே விதமான வேலையைக் கற்கவும் இயலாது. பயிர்த்தொழில், நெசவுத் தொழில், சிற்பம், சித்திரம், தச்சுவேலை, இயந்திரம் இயற்றல் முதலிய வேலைகளில் மாணவர்களைப் பழக்குதல்வேண்டும். மாணவர்கள் பிரியத்தை அனுசரித்தே ஆசிரியர்கள் அவர்களுக்கு வேலைகளைக் கற்றுக் கொடுத்தல் வேண்டும். நெசவுத் தொழிலில் பிரியமில்லாத ஒரு மாணவனுக்கு அத்தொழிலைக் கற்றுக் கொடுத்தால், அவன் அத்தொழிலைப் பிரியத்தோடு கற்கமாட்டான். பின்னும், அவன் அத்தொழிலில் சிறந்து விளங்கவுமாட்டான். பள்ளிக்கூடங்களில் தொழிற்சாலைகள் அமைப்பதனால், செலவு அதிகம் உண்டாகும் என்று சுலபமாக அதிகாரிகள் கூறிவிடுவார்கள். ஆனல், பள்ளிச்சாலைக்குப் பக்கங்களிலுள்ள நிலங்களை வயல்களாக மாற்றி, பயிரிடும் தொழிலை மாணவர்களுக்குக் கற்றுக்

கொடுக்கலாம். வியாபாரத்திற்குத்தான் விளை நிலம் பெரிதும் வேண்டும். கற்றற்கு ஏன்? பட்டினத்தில் உள்ள பாடசாலை மாணவர்களை அருகிலுள்ள தொழிற் சாலைகளுக்கு அனுப்பித் தொழிற் கல்வியை அவர்களுக்குப் புகட்டலாம். மனம் இருந்தால், வழி உண்டாகும். இந்த நிலையில் பள்ளிக்கூடங்களுக்கு அரசாங்கமும் உதவி செய்தல்வேண்டும். நான்காவது பாரத்திலிருந்து ஆறுவது பாரம்வரையில் படிக்கும் மாணவர்களுக்குப் பாதிநாள் வேலையும், பாதி நாள் படிப்பும் கற்றுக் கொடுத்தல்வேண்டும். பாதிநாள் கற்றுக்கொடுக்கப்படும் இலக்கியப் பாடமோ, கல்லூரிப் படிப்புக்குச் சிறிதளவு துணை செய்வதாகவே அமைதல்வேண்டும். இங்ஙனம் கலாசாலைப் படிப்பு அமையுமானால், கல்லூரிக்குச் செல்லா மாணவர், கலாசாலையில் தாம் கற்ற கைத்தொழிலைத் துணையாகக் கொண்டு தாம் பிழைப்பதேயன்றி, தமக்கு அந்நாள் வரையிலும் உதவி செய்துவந்த பெற்றோரையும் காப்பார். விளை நிலம் பெரிதும் உடையோர், தாம் கற்ற புதிய புதிய முறையில் பயிர் செய்து, பெரிதும் பயன் பெறுவர்; தாம் செய்யாவிடினும், ஆட்களை வைத்துக்கொண்டு தொழில் செய்தலில் விருப்பமுடையராய்க் காரியங்களைச் செய்வர். வேறுவேறான வேலைகளில்

முயற்சியுடையராய் மாணவர் செல்வராயினும், தாம் கற்ற இலக்கியத்தால் மனம் கூர்மையடையப் பெற்றிருப்பராதலால், வேலையில்லாக் காலங்களில் புதிய புதிய நூல்களைப் படித்துச் சிறந்த அறிவுடையவராகவும் ஆவர்.

கல்லூரி மாணவர்க்கும் மேற்சொன்ன நன்மைகள் வாய்க்கும் என்பதில் ஐயமில்லை. நுண்ணிய நூல் பல கற்கும் பொழுதும், கல்லூரி மாணவர் தாம் கற்ற கைத்தொழில்களைத் தொடர்ந்து கொண்டே இருப்பராதலின், அவர்க்கும் அவர்க்குரிய வேலைகிடையாத பொழுது கைத்தொழில் பயன்படும்.

ஆராய்ச்சிக் கழகத்தில் பயிலுபவரைப்பற்றி நாம் ஆராயவேண்டுவதில்லை. பெரும்பாலும், ஆராய்ச்சிக் கழகத்தில் பயிலுபவர் சிறிதளவோ பெரிதளவோ செல்வமுடையவராகவே இருப்பர்.

மாணவர் வெளியூர்களுக்குச் சென்று, அரிய பலவற்றைக் கற்றுணரல்வேண்டும். அன்னார் பள்ளிச் சாலையிலேயே காலம்கழித்தால், மிக்க அனுபவமுடையவராகார்.

மாணவர்க்குத் தேகப் பயிற்சி மிகவும் முக்கியமானது. முன்னை நாள், நம் முன்னோர் சிறுவர்களைச் சிலம்ப வித்தைகளிலும் மற்றும் உடல் வலியுறுதற்குரிய வித்தைகளிலும் பழக்கிவந்தனர். இந்நாட்களில், பெரியோர் மேனாட்டு விளையாட்

டுக்களாகிய உதைபந்தாட்டம், சல்லடைப் பந்தாட்டம், குண்டு எறிதல் முதலிய விளையாட்டுக்களில் சிறுவர்களைப் பழக்கிவருகின்றனர். நம் இந்திய மாணவர்கள் நம் நாட்டுச் சிலம்ப வித்தைகளிலும், மேனாட்டு விளையாட்டுக்களிலும் தேர்ச்சிபெறுதல்வேண்டும். நம் உடற்பயிற்சி வித்தைகளைப் பழகுதலால் உடலுக்குப் பலம் உண்டாகும். மேனாட்டு விளையாட்டுக்களைப் பழகுதலால், மனோற்சாகமும், மன ஒற்றுமையும், பலர் கூட்டுறவும், வெற்றி தோல்விகளில் மனம் செல்லாமையும் உண்டாகும். ஆதலின், மாணவர்கள் காலையில் நம் சிலம்ப வித்தைகளையும், மாலையில் மேனாட்டு விளையாட்டுக்களையும் பழகல்வேண்டும்.

ஆசிரியர்கள் பரந்த நோக்கமும், ஆழ்ந்த கல்வியும், மனத்திருப்தியும், மொழியுந்திறனும், அருளும் உடையவர்களாய் இருத்தல்வேண்டும். இந்நல்லியல்புகளைப் பெற்றில்லாதவர் ஆசிரியராய் இருத்தற்கு உரியவராகார் எனப் பெரியோர் கூறுவர். இவைகளையுடையவரே ஆசிரியராக இருத்தல்வேண்டுமென்று இந்நாளில் எண்ணுவில் பயனில்லை. ஜனத்தொகை அதிகப்பட்டிருத்தலின், பல ஆசிரியர்கள் வேண்டும். எனினும், ஆசிரியரிடத்து எவை இருந்தாலும் இல்லாவிட்டாலும், பரந்த நோக்கமும், ஆழ்ந்த கல்வி

யும், மொழியும் ஆற்றலும் இருத்தல்வேண்டும். இவை இல்லையேல், அவரிடத்துப் படிக்கும் மாணவர் பயனடையார்.

பல நல்லியல்புகளை ஆசிரியர்கள் பெற்றிருப்பினும், அவர்களை நடத்துகின்ற தலைமை ஆசிரியர்கள் நிலை சிறிது மாறியிருப்பின், பாடசாலைகளுக்கு அந்நல்லாசிரியர்களால் பயன் ஒன்றும் உண்டாகாது. தலைமை ஆசிரியர்கள், பள்ளி ஆசிரியர்களைத் தங்கள் எண்ணத்தை நடத்திவைக்கும் ஆட்களே எனக் கருதுதல் கூடாது. தாம் நினைப்பன யாவும் சிறந்தன என்றும், மற்றவர் கருதுவன குறையுடையன என்றும் கருதுதல் எத்துணைத் தவறுதல் என்பதை, ஆலோசித்துப் பார்ப்பார் காணல் இயலும். ஆதலின், பள்ளிக்கூடத்தலைவராய் இருப்போர், மாணவர்களுக்குப் பயன் தருவனவற்றை நன்கு ஆராய்ந்து, ஆசிரியர் நிலைகளையும் உணர்ந்து, அவர்களுள் தாமும் ஒருவராக எண்ணி நடப்பின், மாணவர்களுக்குப் பெருநன்மை உண்டாகும். பின்னும் பள்ளிக்கூட அதிகாரிகளும் தலைமை ஆசிரியர்களைத் தங்கள் எண்ணத்தை நடத்திவைக்கும் ஆட்களே எனக் கருதுதல் பெருந்தவறென்பதைக் கூறல்வேண்டுமோ?

ஆதலின், பள்ளிக்கூட ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியர்கள் அனுசரித்தும், தலைமை ஆசிரியர்க

ளைப் பள்ளிக்கூட அதிகாரிகள் அனுசரித்தும் நடப்பார்களாயின், மாணவ உலகத்திற்குப் பெரு நன்மை உண்டாகும்.

3. மலைமீதொருநாள்

ஆநந்த ஆண்டு சித்திரை மாதம் முதல் தினத்தன்று, யான் சுமார் காலை ஆறுமணிக்கு, இயற்கை அன்னையினைக் கண்டு களிக்க என் இல்லத்திற்கு அருகிலுள்ள பல மலைகளில் ஒன்றின்மீது ஏறலானேன். இவ்விதம் யான் ஏறும் பொழுதெல்லாம், ஒரு நீண்ட தாம்பினையும், ஒரு செம்பினையும், சில பழங்களையும் கொண்டுபோதல் வழக்கம். வழியில் யான் அநேக விதமான சிறுவிலங்குகளைப் பார்த்துக் கொண்டே சென்றேன். வெயிலின் கொடுமையால் யான் விரைந்து சென்று, மரங்கள் அடர்ந்த ஓர் இடத்தைச் சுமார் பகல் பன்னிரண்டு மணிக்கு அடைந்தேன்.

ஆண்டுப் பறவைகளின் குரல் அதிகமில்லை. எனக்கு அண்மையிலிருந்த ஒரு மரத்தின் ஒரு கிளையில் இரண்டு குயில்கள் உட்கார்ந்துகொண்டு இன்னிசை எழுப்பிக்கொண்டிருந்தன. அவைகள் என் வரவு கண்டு இன்முறுவல் காட்டி வரவேற்பன போல என் சிந்தனைக்குத் தோன்றின. பின்பு, நான் வேறொரு கிளையை நோக்கினேன்.

ஆண்டு இரண்டு குரங்குகள் விளையாடிக்கொண்டிருந்தன. அவைகளில் ஆண்குரங்கு ஒரு பலாச் சுளையைத் தன் பெண் குரங்கின் வாயில் வைக்க, அதனை அஃது அன்போடு உட்கொண்டது. அச் செயலைக் கண்டு, யான் விலங்குகளுக்குள்ளிருக்கும் அன்பினை நினைந்த வண்ணமாய் அவைகளைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அதுவரையிலும் என்னைக் காணுதிருந்த அவைகள், என்பார்வையால் என் வருகையை உணர்ந்தன. ஆண் குரங்கு என் அருகே ஓடி வந்தது. அதனைக் கண்டதும், யான் அஃது எனக்கேதேனும் துன்பம் செய்யலாமென்று எண்ணினேன். எனினும், அச்சமயம் என் உடல்நிலை யான் ஓடற்குரியதாய் இல்லை. அதற்குள் அக்குரங்கு என் அருகில் வந்து, ஒரு பலாச்சுளையை என் பக்கல் எறிந்தது. அச்செயலால், "பேதாய், எங்கள் இன்ப நிலையைக் கலைக்கின்றாயே! செல்வாய்!" என அஃது எண்ணுவதாகக் கருதி, அவைகளுக்கு யான் செய்த குற்றத்திற்கு வருந்தினேன். திடீரென எனக்குப் பின்னுல் ஓர் ஒலி கேட்டது. அவ்வொலி யாதென அறிய யான் திரும்பினேன். ஆண்டிருந்த தென்னைமரத்தின்மீது பெண் குரங்கினையும், கீழ் இளநீரையும் யான் கண்டேன். அதனைக் கொண்டுவந்து அவை என் தலைமீது எறியுமோ என நான் ஐயங்கொண்டேன். ஆயி

னும், என் மனம் இன்புறும் வண்ணம் ஆண் குரங்கு அதனைக் கொண்டுவந்து என் பக்கல் வைத்துச் சென்றது. பின்னர், யான் அப்பலாச் சுளையையும் இளநீரையும் உட்கொண்டு வழிவந்த களைப்பால் உறங்கினேன்.

சுமார் மாலை ஆறு மணிக்கு யான் தூக்கத்தினின்றும் விழித்துக்கொண்டேன். நாற்றிசையும் பறவைகளின் குரல் ஒலிக்கலாயிற்று. சூரியன் பகலெல்லாம் உழைத்து அலுத்தவன்போல மேற்கடலில் மறையத் தொடங்கினான். யானோ, இரவினை எங்குக் கழிப்பதென ஒன்றுந் தோன்றாதவனாய் மௌனமுற்றிருந்தேன். கதிரவனும் அடியோடு மறைந்தான். அருகில் வீடுகள் இருப்பனவாக எனக்குத் தோன்றவில்லை. ஆதலால், யான் என்னிடமிருந்த சில பழங்களைத் தின்று அவ்விடத்தே மறுநாட் காலை வரையிலும் தங்க உறுதி கொண்டேன். தரையில் படுப்பதற்கு என் மனம் இசையவில்லை. ஆதலால், யான் ஒரு மரத்தின்மீது ஏறி, என் வசமிருந்த தாம்புக் கயிற்றால், பல கிளைகளைப் பற்றாகக் கொண்டு ஒருவலைப் படுக்கையை உண்டாக்கி, அதில் படுத்துக்கொண்டேன். இதற்குள் சந்திரன் தண்ணொளியொடு என் முன் தோன்றினான். வெள்ளை மேகங்கள் துண்டு துண்டாக நீல வானில் நின்ற நிலையை யான் என்னென்று

உரைப்பேன்! சில எனக்குத் தேர் போலவும், சில அழகிய மாளிகைகள் போலவும் தோன்றின. அவைகளை அவ்விதம் நினைந்து மகிழ்ந்துகொண்டிருந்த என் மதியினைக் கண்டு கண்ணைச்சிமிட்டி ஏளனம் செய்வன போன்று, எண்ணிறந்த உடுக்கள் வானில் காட்சி தந்தன. யாதோ காரணம் பற்றித் தரையை நோக்கிய எனக்கு ஒரு வலையின் நிழல் காணப்பட்டது. அதனை நான் முதலில் என் படுக்கை வலையின் நிழலென எண்ணினேன்; ஆனால், சிறிது தூரத்திலிருந்த ஒரு மரத்தின் அடியிலும் அவ்வித நிழல் இருக்கக் கண்டேன். ஆதலால், யான், ஆண்டு என்போல் யாரேனும் இருக்கின்றனரோ என ஐயங்கொண்டு, உற்று உற்று நோக்கினேன்; கண்டிலேன் ஒருவரையும். பின்னர், வலையின் நிழற்குக் காரணம் யாதென அறிய, யான் மனிதர் இயற்கைக்கடங்கி, வானை நோக்கினேன். மதியொளியே இலைகளின் நடுவே நுழைந்து அக்காட்சியை நல்குகின்றதென யான் உணர்ந்தேன்; கரையிலா இன்பமுற்றேன். திரும்பவும் யான் தண்மதியை நோக்கினேன். "ஏ பேதாய்! கதவுகளை மூடிக்கொண்டு வழக்கமாய் இருட்டறையில் உறங்குகின்றாயே! இனியேனும் உனக்கு அறிவு உதிக்குமோ!" என்று என்னை நோக்கி நகையாடுவதாகத் தோன்றிற்று அவ்வான்மதி. பின்

னும், யான் அத்தண்மதியைப் பார்த்த வண்ணமாயிருந்தேன்; என்னையும் மறந்தேன். காகங்கள் "கா கா!" எனக் கரைய யான் கண் விழித்தேன். கதிரவனும் கீழ்த்திசைத் தோன்றினன்.

4. உரையாளரும் அவைக்களமும்

'உரையாளரும் அவைக்களமும்' என்னும் இத் தலைப்பிற்கு அணிசெய்பவர் கேட்போர், உரையாளர், தலைவர் என முத்திறத்தோர். இவருள் எல்லோரும் முக்கியமானவரே.

கேட்போர் நிலைமையினையும், அறிவினையும், அனுபவத்தையும் அனுசரித்து விஷயத்தை எடுத்துக்கொள்ளும் உரையாளரே அறிவுடையோராவர். விஷயச் சிறப்பினைக் கருதித் தமக்கு அனுபவமில்லாத பொருளைப் பற்றிப் பேசிப் பிறர் காலத்தை வீணாக்குபவர் கயவர். விஷயத்திலும் மொழியிலும் ஒருவர் எவ்வளவு உணர்ச்சி பெற்றிருப்பினும், பேசுதற்குரிய முறைகளை அனுசரித்துப் பேசாராயின், அவர் மொழியும் கருத்துக்கள் கேட்போர் மனத்தைக் கவரா. சுருங்கக் கூறுவோமானால், தன்னம்பிக்கையும், மன அமைதியும், உற்சாகமுமுடையார் சிறந்த விஷயத்தைப் பேசவேண்டும் அவசியம் வாய்க்கும்பொழுது பேசுவாராயின், அவர்தம் கருத்துக் கேட்போர்க்குப் பெருநன்மையை உண்டாக்கும்.

எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பலர் முன்னிலையிற் பேசுதற்குமுன், பெரிதும் அவ்விஷயத்தைப் பற்றி உரையாளர் சிந்தித்தல்வேண்டும். விஷயத்தை நீடு நினைந்து, அதனைப் பல பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு, ஒவ்வொரு பகுதியிலும் தகுந்த விஷயங்களை அமைத்தல்வேண்டும். கதை, மேற்கோள், அனுபவம், சரித்திரம், தத்துவப் பொருள் முதலியவற்றைத் தகுந்த இடங்களில் சுருங்கச்சொல்லவேண்டுவனவற்றைச் சுருக்கமாகவும், விரித்துச் சொல்லவேண்டுவனவற்றை விரிவாகவும் மனப்படத்தில் அமைத்துக்கொள்ளுதல் நன்று. இங்ஙனம் மனத்தில் அமைந்த அவ்விஷயத்தை ஓசையில்லாத இடத்தில் அமர்ந்து எழுத ஆரம்பித்தல்வேண்டும். எழுதுகோலும் காகிதமும் சிறந்தனவாய் இருத்தல்வேண்டும். எழுதும்பொழுது அடிக்கடி ஒடிந்துவிடக்கூடிய எழுதுகோலையாவது, தொடர்ச்சியாக மை வருதலில்லாத பேனாவையாவது உபயோகிப்போர் இடை இடையே எழுதுகோல் ஒடிதலினாலும், மை தடைப்படுதலினாலும், எண்ணம் அவைகளின் மேற் செல்லுதலால், தாம் எழுதவேண்டுவதாகிய விஷயத்தில் ஊக்கம் குறைந்து மனம் தளர்வர். சிலர்க்குக் கோபமும் உண்டாகும். அதனால், அன்னார் பேனாவையோ எழுதுகோலையோ வீசி எறியவும் தலைப்படுவர்.

எழுதுகின்றபொழுது கட்டுரை எழுதுவதாக எண்ணுதலாகாது. எந்தக் கூட்டத்தில் உரையாளர் பேசவேண்டுமோ, அங்குக் கூடப் போகும் மக்கள் தம் எதிரில் உட்கார்ந்திருப்பதாக எண்ணுதல்வேண்டும். உரையாளர்க்கு வெற்றி அளிப்பனவற்றுள் எளிய நடை ஒன்று. ஆதலின், எழுதும் நடை எளியதாய் இருத்தல் வேண்டும். அறிஞர் ஆழ்ந்த கருத்துக்களை எளிய நடையில் வெளியிடுவர். ஆழ்ந்த கருத்திலார் உயரிய நடையில் பேசி மக்களை மயக்குவர். முக்கியமாக முழு விஷயத்திலும் தன்னம்பிக்கையின் ஒளி வீசிக்கொண்டிருத்தல்வேண்டும். விஷயத்தில் பொருள் நுட்பம், வீரம், கவுரவம் முதலியன அமையுமாயின், அவ்விஷயம் எல்லோர் மனத்தையும் கவரும். பின்னர், எழுதிய விஷயத்தைப் பன்முறை படித்துப் பார்த்தல் நலம். எழுதியதை மனப்பாடம் செய்துகொள்ளுதல் ஆகாது. அவ்விதம் செய்வோர், பேசுகின்ற காலத்தில் ஒரு தொடர் ஞாபகத்திற்கு வராவிட்டால் மேல் தொடர முடியாமல் விழிப்பர். விஷயத் தொடர்பு மனத்தில் நன்கு அமைந்திருப்பின் போதும். இங்ஙனம் பலகால் எழுதிப் பழகி அனுபவம்பெற்ற எழுத்தாளர், எல்லாக்காலத்தும் தாம் பேசவேண்டும் விஷயத்தை எழுதிய பின்னரே பேசவரவேண்டும் என்பது அவசியம்

இல்லை. ஆனால், பேசவேண்டுவதாகிய விஷயத்தைச் சிந்தித்து மனப்படத்தில் அமைத்துக் கொள்ளாமல், எத்தகையோராயினும் மேடைமேல் ஏறுதல் ஆகாது. விஷயப்பாகுபாடு மனத்தில் அமையும் கால அளவு, அவரவர் அறிவிற்கும் அனுபவத்திற்கும் ஏற்றவிதம் மிக்கும் குறைந்தும் இருக்கும்.

பேசத் தொடங்குதற்குமுன் அவையினரை நன்கு நோக்கி, அவர்தம் நிலைமையை அறிதல் வேண்டும். அவையடக்கத்தைக் கருத்தின்றிக் கூறிக் காலத்தை வீணாக்குதலைப் பார்க்கிலும், அவைக்குத் தாம் உபந்நியாசம் செய்து முடிக்கும் வரையும் மன மொழி மெய்களால் அடங்கி ஒழுகுதல் மிக நன்று. பேசுகின்ற காலத்தில், தலை, கை, கால் முதலிய அங்கங்களை வீணே ஆட்டிக்கொண்டிருத்தல் கூடாது. அங்க சேஷ்டை மிகுமானால் கேட்போர் மனம் அதில் தங்கிவிடும்.

உரையாளர் அதிகமாகக் கத்திப் பேசுதல் ஆகாது. கத்திப் பேசுவோர் கூறும் விஷயம் அருகில் இருப்போர்க்கு நன்கு விளங்காது. ஆனால், அவர் கத்தும் கூச்சலோ, அன்னார் காதுகளைச் செவிடுபடுத்தும். பேசிக்கொண்டிருக்கும் பொழுது, மனத்தைக் கருத்தில் செலுத்துவதோடு, கேட்போரிடத்தும் அடிக்கடி செலுத்

துதல்வேண்டும். இல்லையேல், கேட்போர் மனநிலையை உரையாளர் அறிதல் இயலாது. கேட்போர் மனம் தாம் சொல்லுகின்ற விஷயத்தில் செல்லவில்லை என்பதை உரையாளர் அறிந்தவுடன், அன்னார் மனத்தை இழுக்கும் விதம் குரலை உயர்த்தியாவது, பொருத்தமான இடத்தில் 'நண்பர்களே!' என விளித்தாவது பேசுதல் நல்லது. பேசுகின்ற பொழுது எடுத்துக் கூறவேண்டுபவைகளை எடுத்தும், படுத்துக் கூற வேண்டுபவைகளைப் படுத்தும் கூறுதல் நன்று.

பிறர் மனம் புண்படப் பேசுதல் ஆகாது. பிறர் கெட்ட ஒழுக்கத்தைக் கண்டித்துக் கூற வேண்டுவதாகிய நிலையிலும், அமைதியோடும் விளக்கத்தோடும் கூறுதல் நன்று. விஷயம் முடிவுறும்போது, ஓசையைக் குறைத்துக் கொண்டேவரல்வேண்டும். விஷயத்தை முடித்து விட்ட பிறகு, "ஒன்று சொல்ல மறந்தேன்" என்று மறுபடியும் பேசத்தொடங்கல் ஆகாது. ஏனெனில், தொடர்ச்சி விட்ட பிறகு கேட்போர் மனம் விஷயத்தைத் திரும்பவும் கேட்க இசைவதில்லை.

கேட்போர் மிக்க அமைதியோடு இருத்தல் வேண்டும். இடையில் பேசிக்கொண்டிருப்பாராயின், உரையாளருடைய அரிய விஷயத்தை மற்றவர் அனுபவியா விதம் தடைசெய்பவராவர்.

அன்றியும், உரையாளரையும் தடையின்றிப் பேசா வண்ணம் செய்பவராவர்; உரையாளர் பேசுகின்ற விஷயத்தில் ஏதாவது குறைபாடு இருக்குமானல், அவர் பேசி முடிந்த பிறகு, கேட்போர் தம் எண்ணத்தைத் தெரியப்படுத்தலாம். உபந்நியாசத்தின் இடையிலேயே ஏதாவது குறிப்பிட வேண்டுமானல், காகிதத்தில் சுருக்கமாக எழுதி அனுப்பலாம். உரையாளர் பேசுகின்ற விஷயம் மிக்க தவறுடையதானலும், தமக்கு மிக்க வெறுப்பைத் தருவதொன்றானலும், சபையினின்றும் எழுந்து போதல் ஆகாது. குறிப்பிட்ட கால அளவு அவையில் தங்க இயலாத நிலைமையில் இருப்போர், அவைக்குப் போதல் தவறுடையதாம். உபந்நியாசம் நடந்துகொண்டிருக்கும் பொழுது ஒருவர் புறப்படுவாராயின், அவரைக் கண்டு அருகில் இருப்போரும் புறப்படுவர். இச்செயல் மக்களிடையே அமைதியின்மையை உண்டாக்குவதோடு, உரையாளரின் ஊக்கத்தையும் கெடுக்கும்.

கூட்டங்களில் தலைமை வகிப்போர் அறிஞராயும், திறமையுடையராயும் இருத்தல்வேண்டும். பல உரையாளரை உண்டாக்கலாம்; ஆனல், தலைவர் பிறப்பிலேயே தலைமை வகித்தற்குரிய இயல்பு வாய்ந்தவராய் இருத்தல் வேண்டும். உரையாளர் பேசும் ஒவ்வொரு வாக்கி

யத்தையும் தலைவர் கவனித்துக்கொண்டுவரல் வேண்டும். உரையாளர் தமக்கு மாறுபடப் பேசுவாராயின், அதனைக் குறிப்பிட்டு வைத்துக் கொண்டு, உபந்நியாசத்தின் இறுதியில் அவரைக் குறை கூருது, தம் கருத்தை வெளியிடுதல் தலைவர் கடமை. உரையாளர்க்குக் கொடுக்கப் படும் கால அளவில் தலைவர் கால்பங்கே கைக் கொள்ளுதல்வேண்டும். கூட்டத்தைச் செம்மையாக நடத்துதற்குத் தலைவர் அமர்கின் ருரேயன்றி, உரையாளரைவிட அதிகமாகப் பேசித் தம் சாமர்த்தியத்தைக் காட்டி அவரை அவமானம் செய்தற்கன்று. கூடுமாளுல், அவர் உரையாளர் கூறிய கருத்துக்களில் உயர்வுடை யனவற்றை மக்கட்கு எடுத்துக்காட்டலாம். நம் நாட்டில், அதுவும் தமிழ் நாட்டில், தலைமை வகிப்போர் உரையாளர் கொள்ளும் கால அள வினும் இரண்டுபங்கு எடுத்துக்கொள்கின்றனர். பின்னும், நம்மவரில் பெரும்பாலோர் தலைமை வகித்தல் சுலபமான காரியமென்றும், தாம் தம் மனம்போன விதம் பேசலாமென்றும் எண்ணிக் கால அளவையும் கவனியாமல் பேசுகின்றனர். பொதுமக்கட்குக் கோபத்தை உண்டாக்கக் கூடிய விஷயத்தை உரையாளர் கூறியிருப்பாரா யின், தலைவர் இருதிறத்தார்க்கும் பொதுவாக நின்று, உண்மையைத் திறம்படக் கூறி, அமை தியை உண்டாக்கலாம்.

நம் தமிழ்நாட்டில் கேட்போர் மனம் சலித்து அலுத்துப்போகும் வரையிலும் கூட்டங்கள் நடைபெறுகின்றன. நான்கு மணி நேரம், எந்த நாகரிகமுள்ள மனிதனுல் மனத்தைச் செலுத்தி, பேசப்படும் விஷயங்களைக் கேட்டுக் கொண்டிருத்தல் இயலும்? அதனுலேதான், நம் கூட்டங்களில் அமைதியின்மை பெரிதும் குடி கொள்கின்றது. ஆதலின், காரியக்கூட்டங்கள் தவிர, எந்தக் கூட்டமும் ஒரு மணி நேரத்திற்கு மேல் நடைபெறுதல் கூடாது.

5. இலக்கியப் பயிற்சி

மனித வாழ்விற்கு அரண் செய்வது இலக்கியமே. இலக்கியமாவது ஆன்று அவிந்து அடங்கிய சான்ருேர், மக்கள் மனம் நிரந்தரமான அமைதியில் நுழையும் வண்ணம் எழுதிய கற்பனைக் கருத்துக்களின் தொகுதியே. அவ்விலக்கியத்தினைப் பயில்கின்றவன் தன்னைத்தான் உயர்த்திக்கொள்வதே அல்லாமல், தன்னைச் சேர்ந்தவர்களையும் உயர்த்துகின்ருன்.

மனிதருக்கு நன்மை கற்பனைக் கருத்துக்களாலேதான் உண்டாகும். நடக்கக் கூடாத தொன்றை நடந்ததாகவோ, நடக்கின்றதாகவோ கூறுவதே கற்பனை. கற்பனையாகக் கூறப்படும் பொருள் நுண்ணறிவோடு ஆய்ந்து பார்ப்பார்க் கன்றி ஏனையோர்க்கு உண்மையாகவே தோன்றல் வேண்டும். இல்லையேல், அக்கற்பனையால் மக்களுக்குப் பயனில்லை.

ஒரு நூலின் பருப்பொருள் ஒருவர் அல்லது பலர் வரலாருக இருக்கலாம்; அல்லது புனைந்துரையாக இருக்கலாம். அவ்வரலாற்றின் இடையிடையே அல்லது அப்புனைந்துரையின் இடை

யிடையே கூறப்பெறும் கற்பனைக் கருத்துக்களின் தன்மையாலேதான் அந்நூல் சிறந்த இலக்கியமாகவோ, வேருகவோ பெரியோர்களாற் கருதப்படும்.

பலர் வரலாறுகளைக் கூறும் நூல்களுள் பெரிய புராணம் ஒன்ரும். இந்நூலுள் சிறுத்தொண்டர் புராணம் ஒன்று. சிறுத்தொண்டர் வரலாற்றைக் கூறும் அப்புராணத்துள் கூறப்பெறும் நிகழ்ச்சி எல்லாம் நடந்தனவாகவே இருக்கவேண்டுவதில்லை. கவிஞர் எது மக்கட்குப் பயன்படுமென்று கருதுகின்ருரோ, அதனை அச் சரித்திரத்தோடு சேர்த்துக் கூறலாம். இதனையறியாத ஆராய்ச்சியாளர், கதையினைப் பற்றி ஆராயத் தொடங்கித் தம் காலத்தை வீணுக்குகின்றனர். சேக்கிழார் எழுதவந்தது புராணமென்பதை அறியவேண்டும். அக்கதையால் மக்கள் கெடுவார்கள் என்பதே ஆராய்ச்சியாளர் பயம். ஆனுல், அவர் அவ்வாராய்ச்சியால் தம்மைக் கெடுத்துக்கொள்கின்ருர்களேயன்றி அக் கதை மக்களைக் கெடுப்பதில்லை. கதையால் சேக்கிழார் மக்கட்குக் குறிப்பது யாது? பேரன்பு. அவ்வன்பு எல்லோருக்கும் வாய்ப்பதன்று. அதனைப் படிப்பவரெல்லாம் தம் குழந்தைகளை அறுத்துச் சமைத்து அடியார்க்கிடார். 'இறைவன் சித்தம் நிறைவேறுக' என்று எண்ணிக்

காரியங்களைச் செய்யும் அடியார் செய்கை அது. பின்னும், பிள்ளைக் கறியைக் கேட்ட அவ்வடியார் அப்பிள்ளையை உயிருடன் தந்தமை நோக்கற் பாலது. கதை எழுந்த காலத்திலிருந்து இது வரையிலும், 'சிறுத்தொண்டர் தம் பிள்ளையை அறுத்துச் சமைத்தார் ; யானும் என் பிள்ளையை அறுத்துச் சமைக்கின்றேன்' என்று சொன்னாரு மில்லை ; செய்தாருமில்லை. ஆனால், அக்கதை யைப் படித்து, 'என்னே சிறுத்தொண்டர் அன்பு! என்னே சிறுத்தொண்டர் அன்பு!' என மனமுருகிக் கண்ணீர் வடித்தார் எண் ணிலர்.

தனிப்பட்ட ஒருவர் வரலாற்றைக் கூறும் நூல்களுள் சீத்தலைச் சாத்தனாரால் எழுதப் பெற்ற மணிமேகலை ஒன்று. இச்சரித்திரத்தின் இடையிலே கூறப்பெற்ற ஆபுத்திரன் கதை உண்மையோ பொய்யோ என ஆராய்ச்சியாளர் பெரிதும் ஐயம் அடைகின்றனர். ஆபுத்திரன் முதலில் பசுவினால் காக்கப்பெற்றான் என்றும், மறுபிறப்பில் அவன் பசுவின் வயிற்றில் பிறந்தான் என்றும் சரித்திரம் கூறுகின்றது. 'பசுவின் வயிற்றில் மனிதன் எவ்வாறு பிறத்தல் இயலும்!' என்று கூறி ஆராய்ச்சியாளர் நகைக் கின்றனர். ஆபுத்திரன் சிந்தாதேவியினால் கொடுக்கப்பெற்ற, பசித்தார்க்கு உணவளிக்கும்

அமுதசுரபியோடு மக்களில்லா மணிபல்லவத்தை அடைந்தான் என்றும், அங்குத் தன்மாட்டுள்ள அமுதசுரபி பயன்படாமையை உணர்ந்து, ‘என் பசியை மாத்திரம் தீர்த்துக்கொள்ள இந்த அமுதசுரபியை உபயோகிக்கமாட்டேன்’ என்று அதனைப் பிறர்க்குப் பயன்படுத்த வல்லார்கைச் சேர்வதாக எனக் கோமுகிப் பொய்கையில் எறிந்து பட்டினிக்கிடந்து இறந்தான் என்றும் சரித்திரம் கூறுகின்றது.

நல்லவன் ஒருவன் பிறர்க்குத் தான் உதவி செய்யவேண்டும் என எண்ணுதல் இயற்கையே; ஆனால், பிறர்க்குத் தான் பயன்படா வண்ணம் வாழ்தலைப் பார்க்கிலும் இறந்துவிடுதலே மேலானது என்று கருதி உயிர் விடுதலைக் காணல் அரிதினும் அரிது. தம்மையே கெடுக்கும் போலி ஆராய்ச்சிகளை விடுத்து, இக்கதையினைப்படிப்போர் எல்லாம் ஆபுத்திரனது அருஞ் செயலைப் பெரிதும் பாராட்டி, மனமுருகி, கண்ணீர் விடுவர்.

இனிப் புனைந்துரை நூல்களாகிய கலித்தொகை, ஐந்திணை ஐம்பது என்னும் நூல்களிலிருந்து சில நிகழ்ச்சிகளைக் காண்போம். தலைவன் பொருள் தேடும்பொருட்டுத் தலைவியை விட்டுப் பிரிந்தான். அவன் காட்டில் காணப்படும் நிகழ்ச்சிகளைக் கண்டு, விரைவில்

திரும்பிவிடுவான் என்று தலைவி தோழிக்குக் கூறியதைக் கூறுகின்றன பின்வரும் தாழிசைகள் :

‘அடிதாங்கும் அளவின்றி
அழலன்ன வெம்மையால்
கடியவே கனங்குழாஅய்
காடென்றார் ; அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை
கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணும்
களிறெனவும் உரைத்தனரே !

‘இன்பத்தின் இகந்தொரீஇ
இலைதீந்த உலவையால்
துன்புறூஉந் தகையவே
காடென்றார் ; அக்காட்டுள்
அன்புகொள் மடப்பெடை
அசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும்
புறவெனவும் உரைத்தனரே !

கன்மிசை வேய்வாடக்
கனைகதிர் தெறுதலால்
துன்னரூஉம் தகையவே
காடென்றார் ; அக்காட்டுள்

இன்னிழல் இன்மையால்
வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்கும்
கலையெனவும் உரைத்தனரே !'

ஆண்யானை பெண்யானைக்கு நீர் ஊட்டித் தான் பின் உண்ணும் என்றும், வெயிலின் கொடுமையால் வருந்தும் பெண்புறுவின் துன்பத்தை ஆண்புறு தன் சிறகை விரித்துக் கவித்துப் போக்கும் என்றும், நிழல் இல்லாமையால் வருந்திய பெண்மானுக்கு ஆண்மான் தான் பக்கத்தில் நின்று தன் நிழலைக் கொடுத்து, அதனை அத் துன்பத்தினின்று காக்கும் என்றும் நாம் இத் தாழிசைகளிலிருந்து அறிகிறோம். இங்ஙனம் விலங்குகளிடத்தே காணப்படும் அன்புக்குரிய நிகழ்ச்சிகளைக் கண்டு, தலைவன் விரைவில் திரும்பி விடுவான் என்பது தலைவியின் கருத்து. இவற்றைப் படிக்கும்போது இந்நிகழ்ச்சிகள் உண்மையெனக் கொள்ளுமாறு அமைந்திருக்கின்றன. விலங்குகள் எண்ணிச் செய்யாதனவற்றை அவைகள் எண்ணியே செய்தனவாகக் கவிஞர் கூறியுள்ளார். இவை கவிஞரின் கற்பனையால் தோன்றிய நிகழ்ச்சியாம். இவற்றைப் படிப்போர் உள்ளத்தில், பிற உயிர்கள் மாட்டு அன்பு கொள்ளும் பண்பு தானே வந்து அமைகின்றது. இது புனைந்துரையால் கவிக்கரசர் செய்யும் பெருந்தொழில்.

ஐந்திணை ஐம்பதின் ஆசிரியர் மக்கள் மனத்தே அவர்களையுமறியாமல் அன்பு உதிக்குமாறு ஓர் அழகிய கற்பனையைச் செய்துள்ளார்.

‘ சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென் றெண்ணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டிக் - கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சுஞ் சுரமென்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி.’

[காதலர் மனம் சென்றவழி, சுனையிடத்தே உள்ள சிறிய நீர் பெண்மானுக்குப் போதாதென்று எண்ணியும், அதனை அப்பெண் மான் இனிது உண்ண வேண்டியும், ஆண்மான் கள்ளத் தனமாக உறிஞ்சும் சுரம் என்று காதலர் கூறியுள்ளார்.]

ஈண்டுச் சுனையிடத்தே உள்ள நீர் மிகக் குறைந்த அளவினது என்றும், அஃது இரண்டு மான்களுக்கும் போதாதென்று ஆண்மான் உணர்ந்து, தான் உண்ணுவிட்டால் பெண்மான் உண்ணுதாகையால், தானும் உண்ணுவது போலக் கள்ளத்தனமாக உறிஞ்சும் என்றும், அதனைக் கண்டு தலைவன் தன்மாட்டு நல்லறிவு உதிக்கப்பெற்றுத் திரும்பிவிடுவான் என்றும் தோழி தலைவியினிடத்தே கூறுவதாகக் கவிஞர் கற்பனை செய்துள்ளார்.

இச்செய்யுளைப் படிப்போர் ஆண்மானின் தியாகத்தை எண்ணி மனங் கசியாதிருக்க இயலாது. இது கவிஞரின் கற்பனை என்று எண்ணும் அளவில், இச்செய்யுளால் பெறநிற்கும் இன்பமும் பயனும் நீங்குகின்றன. இவ்விரு மான்களின் நிகழ்ச்சியால் கவிஞர் மக்கள் மனத்தே அன்பினை விதைக்கும் நிலை மிகப் பெரிதே.

இங்ஙனம் அரிய கருத்துக்கள் அமையப் பெற்ற இலக்கிய நூல்களைச் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியர்கள் பெருங்கல்விமான்களாயிருத்தல்வேண்டும். இல்லையேல், இந்நூல்களின் அரிய கருத்துக்களை மாணவர் எளிதில் உணரல் இயலாது. மாணவர்க்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும் அளவு ஆசிரியர் கற்றிருப்பின் போதுமெனக்கொள்ளும் மனப்பான்மை நம்மவரிடையே பெரிதும் உலாவிவருகின்றது. கிதே என்னும் ஜெர்மானிய வித்தகர், "மாணவர் கற்க வேண்டுமளவு அறிந்திருக்கும் ஆசிரியனைப்பார்க்கினும் அஞ்சத் தக்கதொன்று வேறில்லை" எனக் கூறியுள்ளது நோக்கற்பாலது. ஆதலின், ஆசிரியர்கள் தங்கள்பால் கற்கும் மாணவரைப் பார்க்கினும் நூறுமடங்கு அதிகமாகக் கற்றவர்களாயிருத்தல்வேண்டும்.

பிள்ளைகளைக் கல்வி கற்கும்படி அனுப்பும் தாய் தந்தையரும் தம் பிள்ளைகள் வாக்காள

ராகவோ, வைத்தியராகவோ, மற்றும் பெரிய பதவியுள்ளவராகவோ ஆகவேண்டும் என்று எண்ணுகின்றனரேயன்றி, தம் பிள்ளைகள் வாழ்வில் முன்னேற்றம் அடைய விரும்புகின்றாரில்லை. உண்மையை நோக்குங்கால், எவனுடைய மனமானது நாளுக்கு நாள் இளகிக்கொண்டேவருகின்றதோ, எவனுடைய உதிரமானது உணர்ச்சியோடே இருக்கின்றதோ, எவனுடைய மூளையானது கூர்மை அடைந்துகொண்டேவருகின்றதோ, எவனுடைய ஆன்மாவானது என்றுமுள்ள பேரமைதியில் நுழைகின்றதோ, அவனே வாழ்வில் முன்னேற்றமடைந்துகொண்டே வருகின்றவனாவான்.

இங்ஙனங் கூறுதலினால் தொழில் செய்தல் கூடாது என்று யான் கூறவில்லை. ஆனால், ஒவ்வொரு மனிதனும் முதலில் கூறிய உயர்ந்த நோக்கமுடையவனாய் இருத்தல்வேண்டும். இவ்வுடலைக் காக்கும் முயற்சியில் ஒவ்வொருவனும் தலைப்படவேண்டுவது அவசியமே. ஆனால், அதுவே அவனவனுடைய பெருநோக்கமாக இருத்தல் ஆகாது. இலக்கியக் கல்வி ஒருவன் வாழ்வை உயர்த்தும் எனினும், இடையிலுண்டாகும் புகழை அவன் பெரிதாக எண்ணிவிடுவானாயின், அக்கல்வியாலாவதொரு பயனைப் பெறாதவனே ஆவான். புகழ் ஒருவன் செய்துவரும்

செயல் தகுந்ததெனக் காட்டும் ஒரு கருவியே அன்றி, மனித வாழ்வின் முடிவன்று.

இவ்வுலகியலில் உயர எண்ணுவார் எல்லாம் பெரியார் உறவை நாடுகின்றனர். அதுபோலவே, உண்மையான உயர்வை நாடுவார் இலக்கிய நூல் களிடத்து உறவு கொள்ளுதல்வேண்டும். மக்களை உயர்த்த வல்ல கற்பனைக் கருத்துக்களையும் மற்றவற்றையும் படைக்க வல்ல பெரியோரிடத்துப் பழகுதல் இலக்கியங்களோடு பழகுதலைப் பார்க்கிலும் சிறந்ததென ஒரு சிலர் எண்ணுதல் கூடும். உண்மையை நோக்குங்கால், எத்தகைய பெரியோராயினும், ஒரு பொருளைப் பற்றி எழுதுகின்ற காலத்தில் எவ்வளவு சிந்தித்து எழுதுகின்றனரோ அவ்வளவு சிந்தித்து உரையாடுங் காலத்தில் பேசுகிறதில்லை. இவ்வுண்மையைப் பெரியோரிடத்துப் பெரிதும் பழக்கமுடையார் அறிதல் இயலும்.

இலக்கியப் பயிற்சியுள்ளவர்கள் பெருஞ்சோம்பேறிகள் என்னும் தப்பான எண்ணம் மக்களிடையே இருந்துவருகின்றது. உலக சரித்திரத்தைச் சிறிது கூர்ந்து நோக்கின், சிறந்த இலக்கியப் பயிற்சி உடையாரே, பெரிய பதவிகளை வகித்துள்ளார் என்பது நன்கு புலனாகும். நம் நாட்டில் சிறந்த கல்விமான்களாகிய மாணிகக வாசகரும், சேக்கிழாரும் மந்திரிமாரல்லரோ?

ஆங்கில நாட்டுச் சிறந்த கல்வியாளராகிய பேக்கன், மில்டன், மார்லி, மெக்காலே முதலியோரும் அரசாங்கத்தில் பெரும்பதவிகளை வகித்தவரல்லரோ? ஆதலின், இலக்கியக் கல்வி உலகியலிலும் மக்கட்குப் பெருநன்மையை அளிக்கின்றது.

நூல்கள் பல கற்றலில் பயனில்லை. ஆனால், சிறந்த நூல்களைச் சிறந்த முறையில் கற்றல் வேண்டும். சிலர் பல நூல்கள் கற்றிருப்பர்; மனப்பாடமாகப் பல செய்யுட்களையும் கூறுவர்; பதவுரையும் கூறுவர். இதிலிருந்து அவர் கற்றார் என்று கூற இயலாது. பின்னும் சிலர் பல மொழிகளையும் கற்றிருப்பர். ஆனால், அன்னார்க்குப் பல மொழிகள் தெரியும் என்று கூறலாமே தவிர, ஒரு மொழியிலாவது அவர்க்குச் சிறந்த பயிற்சி இருக்கும் என்று எண்ணல் இயலாது. சிலர் பல மொழிகளிலும் ஆழ்ந்த கல்வியுடையராய் இருக்கின்றனர். அங்ஙனம் சிறந்தோராய் இருப்போர் கல்வி பயிலும் முறை மிகவும் சிறந்ததாக இருக்கும். மேற்போக்கான படிப்பு அன்னாரிடத்து இராது. ஒரு நூலை வாசிக்கத் தொடங்கினால், முதலில் அந்நூற் கருத்தினைத் தெரிந்துகொள்ளல்வேண்டும். பின்னர், அந்நூலையியற்றிய ஆசிரியர் உள்ளத்தை அறிதல்வேண்டும். இங்ஙனம் நூலைக் கற்றற்கு அவ்வாசிரியரிருந்த காலத்தை அறிதல் மிகவும் அவசியம்.

பெரியோர் தாம் வாழுங் காலத்தில் நிகழும் நிகழ்ச்சிகளையும் சேர்த்தே நூல் எழுதுவர். இம்முறையில் நூல்களைக் கற்று ஒழுகாதார் எத்தனை நூல்களைக் கற்பினும், எத்தனை மொழிகளைக் கற்பினும், அறிவு வளர்ச்சியும் உணர்ச்சியும் பெறுதல் அருமை. உதாரணமாக, கலித்தொகையிலிருந்து ஒரு செய்யுளை எடுத்துக் கொள்வோம்:

"மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்தம்
உள்நீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரங்
கண்ணீர் நனைக்குங் கடுமைய காடென்றால்
என்னீர் அறியாதீர் போல இவைகூறின்
நின்னீர அல்ல நெடுந்தகாய்! எம்மையும்
அன்பறச் சூழாதே ஆற்றிடை நும்மொடு
துன்பந் துணையாக நாட்டின் அதுவல்லது
இன்பமும் உண்டோ எமக்கு."

[பெண்மரை மானானது மரல்மட்டையைத் தின்னும்படி மழை நீங்க, அதனால் உலர்ந்த மரம் செடி கொடிகளையுடைய மலைகள் வளர்ந்த, போதற்கு அரிய காட்டின் அரிய வழியில் போகின்றவர், குற்றத்தையுடைய மறவரது சுரையையுடைய அம்பு அழுந்துவதால் உடல்

சுருங்கி, உள்ளே ஊறும் நீர் வற்றுவதால் உலர்ச்சியால் வாடுகின்ற நாவிற்குத் தண்ணீர் பெறாததால் உண்டாகிய மனத் தடுமாற்றத்தை யுடைய மிக்க துன்பத்தைக் கண்ணீர் அவர் நாவிலே விழுந்து நனைத்துப் போக்கும் கடுமையை யுடையன அக்காடுகள் என்று நும்பிரிவால் என் தன்மையை அறியாதவர்போல யான் நும்மொடு வருதலை மறுத்த இம்மொழிகளைக் கூறுவதால் என்ன பயன் ? இச்சொற்கள் நின் தன்மைக்குப் பொருந்துவனவல்ல. பெரியோய், நீ எம்மிடத்தில் அன்பு நீங்கும்படி நினையாதே. அவ்வழியில் உண்டாகும் துன்பத்திற்கு எம்மையும் துணை யாக நும்மொடு கொண்டுபோதலை நீர் நினைப்பதே எமக்கு இன்பமே அல்லாமல், வேறு இன்பமும் இருக்கின்றதோ ?]

இத்தகைய செய்யுளைப் படிக்க முயல்வோர் தாமே முதலில் அதற்கு உரை காண முயலல் வேண்டும். பின்னர், அச்செய்யுளுக்குப் பிறர் கூறிய உரையோடு தாம்கொள்ளும் உரை எவ்வளவு பொருத்தமாயிருக்கின்றது என்று காணல்வேண்டும். தாம் கொள்ளும் பொரு ளுக்கு மாறாகப் பிறர் கொள்ளுவாராயின், இரண்டிலும் எது பொருத்தமானதோ, அதைக் கொள்ளுதல் நன்று. பெரியோர் கூறிய உரை என்ற எண்ணத்தால் மாத்திரம் அவ்வுரையைக்

கொள்ளலாகாது. தவறுதல் யார்க்குமுண்டு. ஒருவர் ஒரு காலத்தில் கூறும் கருத்தினாலாவது, செய்யும் அரிய செயலினாலாவது பெரியார் என்று பிறரால் மதிக்கப்படுகின்றார். ஆனால், அவர் எல்லாக் காலங்களிலும் பெரிய காரியங்களையோ அரிய கருத்துக்களையோ செய்யவோ கூறவோவேண்டும் என்பது அவசியம் இல்லை.

இச்செய்யுளை ஆழ்ந்து நோக்கின், 'என்னீர் அறியாதீர் போல இவை கூறின், நின்னீர அல்ல' என்னுமிவ்வாக்கியம் தவறுடையதாய் இருக்கின்றது. தலைவனைத் தலைவி, 'அறியா தீர்போல' என முதலில் பன்மையில் மரியாதையாகக் கூறி, பின்னர் 'நின்' என்று ஒருமையில் கூறுகின்றாள். இவ்வாக்கியந் திருத்தப்படல் வேண்டுமென்பது சிலர் கொள்கை. இது போன்ற வாக்கியங்கள் பல கலித்தொகையிற் காணப்படுகின்றன. சிலவற்றிற்கு ஒருமை பன்மை மயக்கம் வந்தமைக்குக் காரணம் கூற இயலவில்லை. ஆனால், ஈண்டு இவ்வாக்கியம் இவ்வகையில் அமைந்திலையாயின், இச்செய்யுள் ஒரு வகையில் அழகற்றதென்றே கூறல்வேண்டும். முதலில் தலைவி தன் மனத்தைத் தலைவன் கூறிய காட்டின் கடுமையில் செலுத்தினாள். பின்னர் அவள் தன்னிலையை நினைக்கின்றாள். 'என்னீர் அறியாதீர் போல' எனக் கூறும் வரையி

லும் அவள் கலக்கமின்றி இருக்கின்றாள். அவன் விட்டுப்பிரிகின்ற நிலை தன்னைத் தாக்குதலால் அவள் கலக்க முற்று தன்னெதிர் நிற்கின்ற தலைவனை, 'நின்னீர அல்ல, நெடுந்தகாய், எம்மையும் அன்பு அறச் சூழாதே' எனச் சிறிது கோபத்தால் கூறுகின்றாள். அங்ஙனங் கூறும் பொழுதுங்கூடத் தலைவனை 'நெடுந்தகாய்' என்று அவள் விளித்தலிலிருந்து அவளது மனத்தின் உயர்வை அறியலாம். உடனே அவள் கலக்கம் நீங்கி, 'நும்மொடு' என்று பன்மைச் சொல்லை அமைக்கின்றாள். 'அன்பறச் சூழாதே' என்னும் தொடர் அவன் செல்லின் அவள் உயிரும் செல்லும் என்பதைக் காட்டுகிறது. இங்ஙனம் அழகு பெற வாக்கியங்களை அமைத்த கவிஞரின் திறமையை என்னென்று புகழ்வது!

இது வரையிலும் நாம் இச்செய்யுள் கூறும் நிகழ்ச்சியை ஆய்ந்தோம். இனி இச்செய்யுளை இயற்றிய இக்கவிஞரின் உள்ளத்தைக் காண்போம். 'நெடுந்தகாய், அன்பு அறச் சூழாதே' என்னும் வாக்கியமே கவிஞர் உள்ளத்தைக் காட்டி நிற்கின்றது. அன்பிலார் இறந்தவராவர் என்னும் அரிய கருத்து மக்கள் மனத்தே படும் வண்ணம் அவள் வாயினின்றும் கவிஞர் இத்தொடரை வருவித்தார்.

'அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு' எனக் கூறும் தமிழ் மறை இதற்குச் சான்று பகரும். இச் செய்யுளில் அமைந்த மற்ற வாக்கியங்களெல்லாம் இவ்வாக்கியத்திற்குத் துணையாகவே அமைந்துள்ளன. இச்செய்யுள் ஒருபடம். ஓவியக்காரன் வருணங்களால் படம் எழுதுகின்றான். கவி சொற்களாகிய வருணங்களைக் கொண்டு படம் வரைகின்றான்.

ஓவியன் ஒருவன் கண்ணன் படம் ஒன்று வரையத் தொடங்குகின்றான் என்று வைத்துக் கொள்வோம். அவன் முதலில் கண்ணன் உருவத்தை வரைவான். பின்னர் அவ்வுருவம் விளக்கமுறுதற்கேற்ற வகையில் ஆறு, செடி, கொடி முதலியவைகளைப் பக்கங்களில் வரைவான். அதுபோலவே, சிறந்த கவிஞரும் தம் கருத்து விளக்கமுறுதற்கேற்ற வகையில் அக்கருத்திற்கு முன்னும் பின்னும் பல நிகழ்ச்சிகளைச் சேர்ப்பர்.

கற்றோன் ஒருதனிப்பட்ட மனிதன். அவன் தன் கண்ணால் மாத்திரம் பொருள்களைக் காணுதவில்லை. அவன் கம்பர், திருவள்ளுவர், இளங்கோ, கடுங்கோ, கபிலர் முதலியோரின் கண் கொண்டே பொருள்களைக் காண்கின்றான்; இயற்கையின் வண்ணத்தைக் கம்பர்பால் அறிந்திருப்பான்; மனித இயல்பை வள்ளுவர்பால் கற்றிருப்

பான்; பிறவற்றைப் பிறர்பால் உணர்ந்திருப்பான். அவன் தீட்டும் செய்யுளாகிய படத்தில் முற்கூறிய பேராசிரியர் கருத்துக்களோடு அவன் அனுபவமும் அமையும். ஆதலின், இயற்கைக் கவிகளைவிட அவன் வேறுகின்றான்.

கடினமான நூல்களை ஆழ்ந்தாழ்ந்து படிக்கின்றவர்க்கே நுண்ணறிவு உண்டாகும். அவ்வப்போது தோன்றும் நவீன நூல்களையும், ஆழ்ந்த கருத்திலாக் கட்டுரைகளையும், பத்திரிகைகளையுங்கூட மனம் தளர்ச்சியுற்றிருக்கும் காலத்தில் படிக்கலாம். ஆனல், அவைகளைச் சிறந்தவை என்று சேமித்து வைத்துக்கொள்ளுதல் ஆகாது. கற்றவர் என்று தம்மை எண்ணுகின்ற ஒவ்வொருவர் வீட்டிலும் குறைந்த அளவு ஐம்பது இலக்கிய நூல்களாவது இருத்தல் வேண்டும். கல்லூரியில் தமிழாசிரியராய் இருக்கும் சில புலவர்களிடத்தில் சிறந்த அகராதிகூடக் கிடையாது.

தன் கருத்தினைக் கொண்ட நூலே சிறந்ததென்றும், தன் கருத்துக்கு மாருகக் கூறும் நூல் தாழ்ந்ததென்றும் கூறுதல் அறிவுடைமையாகாது. எந்த நூலுள் தன் கருத்துக்களும், தான் அதுவரையிலும் அறியாத கருத்துக்களும் கலந்திருக்கின்றனவோ, அதுவே சிறந்தது. தனக்குத் தெரிந்தவைகளையே கூறும் நூலைப்

படித்தலால் பயனென்ன? தனக்கு மாறான கருத்துக்களைச் சொல்லுபவனே அறிவிற்கு உண வளிப்பவனாவன். புத்தகத்தைப் படித்ததும், 'என்னே நம் அறிவு! இத்தகைய கருத்துக் களை இது வரையிலும் எண்ணியதே இல்லையே!' என்று எண்ணும் வண்ணம் கருத்துக்கள் பொலி யும் நூல்களையே கற்றல்வேண்டும்.

ஒரு நாளில் குறைந்தது பதினைந்து நிமிடங்க ளாவது கடினமான இலக்கிய நூல்களைக் கற்றல் வேண்டும். 'கால் மணி நேரம் கற்கும் நூலறிவு என்ன பயனையளிக்கும்!' என்று எண்ணலாகாது. கால்மணி நேரத்தில் கற்றதனால் பெற்ற இன்ப மானது ஆயுள் முழுதும் உண்டென்பதை எவராலும் மறுக்க முடியாது.

நூல்களைப் படிக்கும்பொழுது சிறந்த கருத்துக்கள் உள்ள இடங்களை எழுதுகோலால் குறிப்பிடுதல் நலம். ஒரு நூலில் உள்ள அழகிய பாகங்களைத் தனிப்பட எழுதி மனப்பாடம் செய்யவேண்டும் என்பது அவசியமில்லை; அவ் வழகிய கருத்துக்களை மனத்தில் அமைத்துக் கொண்டால் போதும்.

சிறந்த நூல்களை அடிக்கடி வாசித்தல் நல்லது. அந்நூலாசிரியர்களைப் போல எழுத முயலுதல் ஆகாது. அவரவர் கல்விக்கும் உணர்ச்சிக்கும் ஏற்றவாறு கருத்துக்களும் நடையும் அமை கின்றன.

நூல்களைப் பயிலும்போது அந்நூற் கருத்துக்களை எதிர்க்கவோ, அப்படியே நம்பிவிடவோ, அக்கருத்துக்களைப்பற்றி வாதமிடவோ எண்ணலாகாது. ஆனால், அக்கருத்துக்களை மதிப்பிடுதற்கும் சிந்தித்தற்குமே பயில வேண்டும்.

உயர்வும் கம்பீரமுமான மனப்பான்மை உடையவனிடத்திருந்துதான் உறுதியும் வீரமும் அமைந்த சொற்கள் வெளிவரும். பொருள்களைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்கும் பயிற்சியுடையார்க்கே ஒன்றைப்பற்றிச் சுருங்கக் கூறும் ஆற்றல் அமையும். இந்தியராகிய நாம் பெரிதும் சுத்தமுடையோம் என்று பெருமை பாராட்டிக் கொள்கின்றோம். ஆனால், நாம் உபயோகிக்கும் புத்தகங்களைக் கையில் வாங்குதற்கும் வெளிநாட்டினர் கூசுகின்றனர்.

நூல் நிலையங்கள் பல ஊர்தோறும் நிறுவுதல் வேண்டும். ஒரு நூலைக் காணும்போதே அதனை முற்றிலும் படிக்கவேண்டும் என்னும் எண்ணம் தோன்றுமாறு அச்சிடுவோரே நாட்டிற்குப் பெருநன்மையைச் செய்வோராவர். நூல்களைப் படித்தலில் விருப்பம் உடையார்தம் ஊக்கமும் குறையும் வண்ணம் தம் இலாபத்தையே பெரிதுங் கருதி நூல்களை அச்சிடுவோர் எண்ணிலர் நம் நாட்டில் இருந்துவருகின்றனர். இவர்களே நம் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பகைவராவர்.

6628

வாழ்விற்கு ஊன்றுகோலாம் இலக்கிய நூல்களுக்கு நாம் நம்மாலியன்றளவு உரையோ ஆராய்ச்சியோ, கண் கவர் பதிப்போ, மொழி பெயர்ப்போ வழங்கிய பின்னரே மற்றக் காரியங்களை நோக்குவோமாக.

6. ஒரு தூரியத்தின் சுய சரிதம்

அந்தோ! என்மீது ஏன் நீர் இப்படி விழுகின்றீர்? பெரியீர், கோபியாதீர்! கோபியாதீர்! வீசி எறிந்தால் வீழாதார் யார்? இதோ பலகணியின் பின்புறம் உட்கார்ந்திருக்கும் அப்பெரியவரைக் கூர்ந்து பார்க்கும்படி யான் உம்மை வேண்டுகின்றேன். அவர் ஆங்கிலமும் அருந்தமிழும் பெரிதும் படித்தவராம்; இருமொழியிலும் பலப்பல பட்டங்கள் பெற்றிருக்கின்றாராம். ஏதாவது கட்டுரை ஒன்று எழுத உட்கார்ந்தால், அவருக்குக் கோவையாகக் கருத்துக்கள் தோன்றுவதில்லையாம்; அதுவும் என்னை வாங்கிய நாளாய் அவருக்குப் பீடை பிடித்துவிட்டதாம். இன்று அவர் ஏதோ எழுத உட்கார்ந்தார்; பத்துச் சொற்கள் எழுதினார்; அப்பத்துச் சொற்களையும் ஐந்தைந்து முறை அடித்தடித்தெழுதினார். அதற்குமேல் தொடர்ந்து எழுத அவருக்கு விஷயம் வரவில்லை. அதனால், அவர் கோபங்கொண்டு, அக்கோபத்தை என் மீது காட்டினார். என்னை வாங்குவதற்கு முன்னும் அவர் சுயமாகக் கட்டுரையொன்று எழுதியதாகத் தெரிய

வில்லை. பிறர் எழுதியவைகளைப் படித்துக் கிராமபோன்போல வெளிப்படுத்துபவர்க்குச் சிறப்பு என்ன? பட்டங்கள் பெற்றவரெல்லாம் அறிவினரோ? இவரால் ஆகாத காரியத்திற்கு யான் என் செய்வேன்! பட்டங்களுக்கும், அறிவிற்கும், எழுதுவதற்கும் தொடர்பு என்ன? பட்டங்கள் பெறாத நுண்ணறிவுடைய எழுத்தாளர் பலர் உளர். அறிவும் பட்டங்களும் பெற்ற எழுத்தாளரும் உண்டு. பட்டங்கள் பல பெற்ற அறிவிலாரும் உண்டு. அறிவும் பட்டங்களும் பெற்று நூல் எழுதும் சக்தியற்றவர் எண்ணிலர். அவர் அவ்வளவு படித்தும் இச்சிறு செய்தியை அறியாதவராய் இருக்கின்றார். இதனைக் கூட அறிந்துகொள்ள இயலாத அவரை யான் எதற்கு ஒப்பிடுவேன்! என் செய்வது! என் விதிவசத்தால் யான் அவரிடத்து வந்து சேர்ந்தேன். யாரை விட்டது விதி! வருவன வருக! நண்பரே, உம்பெயர் யாது? சொல்வீரோ?

பெரியீர், என் பெயர் 'தூரியம்.' மனிதர் தம் நிலையினரையே காண்பர் என்பது உண்மையே. சாக்ரெடிஸ் வெளிவந்தால் தம்மையொத்த வேறு ஒருவரை அவர் காண்பர் என்றும், பேய் வெளி வந்தால் அது வேறொரு பேயையே காணுமென்றும் ஜர்மானிய வித்தகர் ஒருவர் கூறியுள்ளார். நண்பரே, நும்பெயர் யாது?

பெரியீர், என் பெயர் எழுதுகோல். 'தூரிய' மென்னும் அழகிய பெயர் பெற்ற நண்பரே, நீர் இவ்வீதியில் கிடப்பதற்குக் காரணம் யாது?

நண்பரே, துன்பம் நிறைந்த என் சுய சரிதத்தை யான் கூறுவேனேல், நும் கண்கள் ஆறுகளைப் படைக்கும். ஒருவன் தான் அனுபவிக்கும் துயரைத் தன்மாட்டு இரக்கம் காட்டக் கூடிய ஒருவரிடத்துக் கூறினாலன்றி, அத்துயர் குறையாதென்பர் பெரியோர். ஆதலின், என் வரலாற்றைக் கூறுகின்றேன்; கேட்பீராக.

நான் இங்கிலாந்தின் தலைநகராம் இலண்டன் மாநகரில் 1930 - ஆம் ஆண்டு மே மாதம் முதல் தினத்தன்று ஓரழகிய தொழிற்சாலையில் பிறந்தேன். அங்கிருந்து யான் இவ்விந்தியநாட்டிற்கு அனுப்பப்பெற்றேன். முதல் முதல் என்னைக் கப்பலிலிருந்து கொண்டு போனவர் ஸ்பென்சர் கம்பெனியார். அன்னார் கடையில் யான் சுமார் ஆறுமாதகாலம் தங்கியிருந்தேன்.

ஒரு நாட் காலை, நீண்ட உருவினன், அழகிய தோற்றத்தினன், அகன்றுயர்ந்த மார்பினன், அழகிய கண்ணினன் ஒருவன் வந்தான். அவன் யான் இருக்கும் இடத்தை அடைந்து என் தலைவனை நோக்கி, 'ஐயா, எனக்கொரு தூரியம் வேண்டும்' எனக் கேட்டான். உடனே என் தலைவன் என்னைத் தூக்கி அவனிடத்தில்

கொடுத்தான். எனக்கு உரிய விலையை அவன் கொடுத்துவிட்டுத் தான் ஏறிவந்த மோட்டார் வண்டியில் அமர்ந்து, தானே அவ்வண்டியைச் செலுத்தலானான். அவன் கண்களுக்கெதிரில் வந்துகொண்டிருந்த மனிதர் அவனுக்கு மனிதராகத் தெரியவில்லை. வண்டியின் வேகத்தால் எனக்கும் அவனுக்கும் எந்த நிலையில் கேடு உண்டாகுமோ என்று யான் எண்ணி எண்ணிக் கலங்கினேன். கடவுள் அருளால் இடையூறின்றி வண்டி ஓர் அழகிய மாளிகையின் வாயிலை அடைந்தது. என்னைப் பத்திரமாகப் பிடித்துக் கொண்டு அவ்வழகன் மாளிகைக்குள் நுழைந்தான்.

நண்பரே, அம்மாளிகையின் இயல்பை யான் எவ்வாறு உரைப்பேன்! மாளிகையின் வெளித் தோற்றம், வாயிலை வண்டி அடைந்தபொழுதே என்கண்களைக் கவர்ந்தது. வெளிப்பார்வைக்கு நல்லவர் போன்றும், நாகரிகமுடையார் போன்றும், தூயவர் போன்றும் காணப்படுகின்ற கீழ்மக்கள் போன்றிருக்கின்றதோ அம்மாளிகை என யான் முதலில் எண்ணினேன். ஆனால், உள்ளே நுழைந்ததும் என் கண்கள் களிக்கக் காட்சியளித்த பொருள்கள் பல. அழகிய உருவங்களையும் அழகிய படங்களையும் மற்றப் பொருள்களையும் யான் கண்டுகொண்டே அவ்

விளைஞேைடு ஓர் அழகிய அறையை அடைந்தேன். அவ்வறையின் நான்கு மூலைகளிலும் நான்கு உருவங்கள் வைக்கப்பெற்றிருந்தன. ஒரு பக்கம் பல புத்தகங்கள் அடங்கிய கண்கவர் வனப்பமைந்த பத்துப் பெட்டிகள் காட்சி தந்தன. அப்புத்தகங்களைக் கண்டவுடன் என்னைக் கொண்டு சென்ற இளைஞன் நிலையால், யான் முதலில் அப்புத்தகங்கள் அவன் படித்தவையே என எண்ணினேன்; ஆனால், சில ஆண்டுகளுக்கு முன்னே இறந்த அவன் தந்தையாரின் புத்தகங்களே அவை என்றும், அவ்வழகிய கட்டடமும், சிலைகளும், படங்களும் அவன் தந்தையாரால் அமைக்கப்பெற்றன என்றும் பின்னர் அறிந்தேன். என்னைக் கொண்டு சென்றதும் அவ்விளைஞன் படம் எழுதுதற்கென்று தயாரிக்கப்பெற்ற காகிதத்தில் என் நிலையைப் பரிசோதிக்க வருணங்களைக் குழைத்துத் தன் மனம் போனவிதம் பூசிக்கொண்டிருந்தான். படிகளின் பக்கம் யாரோ வருகின்ற ஓசை கேட்டது. உடனே அவன் யாரோ வருகின்றார் என்று எண்ணி, தான் எழுதிக்கொண்டிருந்த காகிதத்தை அருகிலிருந்த கூடையில் போட்டுவிட்டுப் படிக்கருகில் சென்றான். வந்தது ஒரு பூனை. உடனே அவனுக்குக் கோபம் எழுந்தது. கவுரவமாகக் கையில்

வைத்திருந்த என்னைக் கோபத்தால் அப்பூனையின் மீது வீசி எறிந்தான். அந்தோ! யான் பெற்ற துயரை யார்க்கெடுத்துரைப்பேன்!

சில நிமிடங்களுக்கெல்லாம் அவன் தந்தையாரின் நண்பர் ஒருவர் அவனைப் பார்க்க வந்தார். அவன் அவரிடம் பல காரியங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தான். பின்னர், அவன் யான் விழுந்திருந்த இடத்திற்கு வந்து என்னை எடுத்து ஒரு கையால் திருத்திக்கொண்டே, 'பெரியீர், நான் ஒரு விலையுயர்ந்த தூரியம் வாங்கிக்கொண்டுவந்திருக்கின்றேன். அதன் துணைகொண்டு நீங்கள் எனக்கோர் அழகிய உருவம் வரைந்து தரல்வேண்டும்' என்று கேட்டான். அதற்கிணங்கி, அவரும் ஒரு வான்கோழியின் உருவத்தைப்பொதுவாகத் திறம்படவரைந்தார். மற்றொரு நாள் வந்து, அதனை முடித்துத் தருவதாகச் சொல்லி அவர் சென்றார்.

சுமார் இருபது நாட்களுக்குப் பிறகு, அவ்விளைஞனைக் காணப் பெண் பேசும் விஷயமாகச் சிலர் வந்தனர். அன்னாரைக் கண்டதும் அவன் ஏதோ வேலையிலும் படிப்பிலும் ஆழ்ந்திருப்பவன் போலப் பிறர் எண்ணும் வண்ணம் சில புத்தகங்களை எடுத்து மேஜையின்மேல் வைத்தான். வருணத்தைக் குழைத்து அவ்வோவியர் எழுதிய உருவத்தைத் தானே எழுதியவன் போலக்

காண்பார் நினைக்கும்விதம் அவ்வுருவத்தின் அடிப்பாகத்தில் பூசத்தொடங்கினான். நல்ல காலமாக அவன் அறைக்கு ஒருவரும் வரவில்லை. இவ்விதத் திருவிளையாடல்களுக்குப் பாத்திரமாய் யான் அங்கு ஆறுமாதம் கழித்தேன். என்னை வாங்கியதால் அவன் பெற்ற நன்மை ஒன்றுமில்லை. ஆனால் நாயின் வருகையாலும், பூனையின் வருகையாலும் யான் பட்ட துன்பமே பெரிது.

ஒருநாட் காலை, அவனைக் காணல் வேண்டி ஓவியர் ஒருவர் அவ்விடம் வந்தார். அவரைக் கண்டதும், இளைஞன் வெகு ஆர்வத்தோடு அவரை அழைத்து, ஆதனம் அளித்து இன்னுரையாடிக் கொண்டிருந்தான். பிறகு, வந்த அவ்வோவியர் அவனைத் தமக்கு ஒரு தூரியம் தரும்படி கேட்டார். அவனும் உடனே என்னை அவரிடம் சேர்த்தான். நான் அன்று முதல் சுமார் இரண்டு வருடகாலம் பிறர்க்குப் பயன் படுபவனாய் வாழ்ந்துவந்தேன். அப்பெருமகனார் ஐந்து பெரிய படங்களைப் படைத்தார். அவைகள் காண்பார் மனத்திற்கு இன்பமூட்டுவனவாயும், கெட்டவர் மனத்தை நன்னெறியில் நிறுத்துவனவாயும் அமைந்தன.

ஒருநாள் அவர் நண்பர் ஒருவர் அவரைக் காண வந்தார். அவர் தோற்றம் மிகவும் கம்பீர

மாகவே இருந்தது. அவரைக் கண்டதும் எனது தலைவர் இன்னுரைகொண்டு அவர்க்கு நல்வரவு கூறினார். வந்தவர் தம்மிடமிருக்கும் அறிவைப் பிறர்க்கு இரண்டு பங்காகக் காட்டவேண்டுமென்னும் எண்ணமுடையவர். என்னுடைய தலைவர் தாம் படைத்த சில படங்களை அவருக்குக் காட்டினார். அவைகளைக் கண்டு அவர் என்னுடைய தலைவரை நோக்கி, "நண்பரே, நீர் எழுதுவன எல்லாம் வெளிநாட்டு ஓவியக்கலையை யொட்டி இருக்கின்றனவே! ஏன் நீர் நம் இந்திய ஓவியக்கலையையொட்டி உருவங்கள் படைத்தல் கூடாது? நான் எப்பொழுதும் நம் நாட்டு ஓவியக்கலையையொட்டியே எழுதுகின்றேன்" எனக் கூறினார். அதற்கு என்னுடைய தலைவர், "நண்பரே, இந்தியக்கலையின் பெயரால் இந்நாள் படைக்கப்பெறும் உருவங்கள் என் மனத்திற்கு இன்பம் தரவில்லை. அவை உண்மையில் நம் சாத்திரத்திற்குப் பொருந்தப் படைக்கப்பெற்றனவுமல்ல. வங்காளியர் இந்தியக்கலை என்னும் பெயரால் தம்மனம் போன விதம் கை கால் விரல் முதலிய அங்கங்களை நீட்டிவிடுகின்றனர். அவர்கள் வரையும் படங்களைப் பார்த்து மற்றவர்களும் அவ்விதமே உருவங்கள் எழுதுகின்றார்கள். பொதுமக்கள் இவ்விதக் கலைகளில் தங்கள் கருத்தைச் செலுத்துவதில்லை. நான் நம்

பெரியார் வரைந்த சாத்திரங்களை ஆதாரமாகக் கொண்டு உருவங்கள் படைப்பேனாயின், என்னால் படைக்கப்பெறும் உருவங்கள் அவ்விதப் படங்களைப் பார்த்துப் பழகிய மக்களுக்கு இன்பமூட்டா. ஆதலால், நான் இந்நாள் மக்கள் திருந்துதற்குரிய வாழ்க்கைத் தத்துவங்களை உள்ளடக்கி, ஆங்கில ஓவியக்கலை முறையை அனுசரித்து, உருவங்களைப் படைக்கின்றேன்" என்றார். உடனே அவர் கோபங்கொண்டு, "தயவு செய்து எனக்கொரு தூரியம் கொடும். நான் ஒரு படம் நீரும் வியக்கும் வண்ணம் வங்காளியர் எழுதும் முறையை அனுசரித்தே எழுதுகின்றேன்" என்றார். புன்னகையுடனே என்னுடைய தலைவர் என்னை அவரிடம் சேர்த்தார்.

அவர் ஒரு மணி நேரம் வருணங்களைக் குழைத்துக் குழைத்து ஓர் உருவம் வரைந்தார். அவர் எழுதிய உருவம் அவருக்கே இன்பமூட்டவில்லை. அதனால், அவர் வெகு கோபமுற்று என்னை வீசி எறிந்தார்.. பின்னர் அவர் தம் நண்பரோடு சில விஷயங்களைப் பேசிவிட்டு வெட்கத்தோடு வீடு சென்றார்.

சில நாட்களுக்குப் பிறகு, என் தலைவரின் தம்பி மகன், அலங்காரப் பொருள்கள் பலவற்றுடன் என்னையும் பள்ளிக்கூடத்திற்கு எடுத்துச்

சென்றான். அப்பள்ளிக்கூடத்து ஆசிரியர் ஒருவர் என்னை அவனிடமிருந்து கைக்கொள்ள முயன்றார். ஆனால் அவன் கொடுக்கவில்லை. அன்று மாலை, அவன் விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது என்னைக் கீழே விட்டுவிட்டான்.

அந்தோ! என் விதிவசத்தால் யான் பணமே பெரிதெனக் கருதும் முட்டாள் ஓவியன் ஒருவனிடம் சிக்கிக்கொண்டேன். அவன் என் அருமை உணராது என்னை எதற்கும் உபயோகித்தான். அவன் படைத்த உருவங்கள் எண்ணில. அவைகளைக் காண்பவர், அந்தோ! கெடுவர். என் உடலும் கெட்டது. அவன் நேற்று ஓரிடத்திற்கு வேலைக்காகச் சென்றான். அவன் சட்டைப் பையில் இருந்த ஒரு துவாரத்தின் வழியாய் யான் கீழே விழுந்தேன். இனி யான் யார் கையில் அகப்படுவேனோ!!!

7. துன்பமலை

உலக மாந்தருள் ஒவ்வொருவரும் தாம் தாமே மற்றவரைவிடத் துன்பங்களை அனுபவிப்பவர் என்று கலங்குகின்றனர் என்றும், அன்னாரைத் தம் துன்பங்கள் எல்லாவற்றையும் ஒரு பொது வான இடத்தில் கொண்டுவந்து போடும்படி செய்து, அவற்றை எல்லோர்க்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கப்படும் முயற்சி தொடங்கப் படுமாயின், அவ்வித முயற்சிக்கு முன்னே அவருள் ஒவ்வொருவரும் தாம் தாம் முன்பு பெற்றிருந்தவையே தத்தமக்கு வேண்டுமென்று கருதுவர் என்றும் ஒரு வித்தகர் கூறியுள்ளார். அதனைத் தொடர்ந்து, வேறொரு வித்தகர், மாந்தருள் ஒவ்வொருவரும் அனுபவிக்கின்ற துன்பங்கள் அளவில் குறைந்தவையேயாயி னும், மிக்கவையேயாயினும் அவரவர்க்கு எளி யவை என்றும், அவை பிறரால் மாற்றிக்கொள் ளப்படுமாயின், தாங்கற்கு அரியன என்றும் முடிவு செய்தார்.

இவ்விரு கருத்துக்களின் உண்மையை நாட அமர்ந்த யான், உட்கார்ந்திருந்த நாற்காலி

யிலேயே என்னையும் அறியாமல் உறங்கி ஒரு கனவு கண்டேன். அக்கனவில், "ஓ மக்களே, உங்கள் துன்பங்கள் எல்லாவற்றையும் இதோ இருக்கின்ற வெளியில் கொண்டுவந்து போடுங்கள்" என்று கடவுள் வாக்கு வானில் எழுந்தது. மாந்தருள் ஒவ்வொருவரும் தத்தம் துன்பங்களைக் கொண்டுவந்து போடத் தொடங்கினர். அக்காட்சியைக் காண யான் அப்பெருவெளியின் நடுவில் நின்றேன். சில மணி நேரத்திற்கெல்லாம் அங்குத் துன்பக் குவியல் ஒரு மலையாய்க் காணப்பட்டது. அவ்விடத்தில் காற்றினும் ஒல்கிய உருவத்தினையுடைய ஒருபெண், கையில் பூதக்கண்ணாடி ஒன்றை வைத்துக் கொண்டு மிக்க சுறுசுறுப்போடு அங்குமிங்கும் திரிந்துகொண்டிருந்தாள். அவள் பெயர் கற்பனை. ஒவ்வொருவரும் தத்தம் துன்ப மூட்டையை நன்கு கட்டிக்கொண்டு குறிப்பிட்ட இடத்தில் சேர்க்கும் விதத்தில் அவள் பெரிதும் பாடுபட்டாள். துன்பக் குவியல் வானளாவி இருத்தலையும், என்னையனைய மக்கள் பெருந்துன்பங்களுக்கிடையில் துன்புறுதலையும் கண்டு நான் பெரிதும் வருந்தினேன். என்னுடன் இருந்த நண்பர் பலர் எனக்குப் பலவிதக் காட்சிகளைக் காட்டி, என் எண்ணத்தைப் பலவற்றில் செல்லுமாறு செய்தனர்.

மிக்க சந்தடி நிறைந்த அவ்விடத்தில் ஒரு மனிதன் மிகப்பத்திரமாக ஒரு முத்திரை வைத்த மூட்டையைக் கொண்டுவந்து அக்குவியலில் போட்டான். அதனை நான் கூர்ந்து ஆய்ந்ததில், அஃது அவன் வறுமை என்று அறிந்தேன். வேறொருவன் பெருமுயற்சியால் ஒரு பெரிய மூட்டையை ஒரு வண்டியிலிருந்து இழுத்து அக்குவியலில் போட்டான். ஆய்ந்து பார்த்ததில், அம்மூட்டை அவன் மனைவி என்று நான் அறிந்தேன். காதலாகிய அம்பினால் வருத்தப் பெற்ற காதலர் பலர் தம் காதலை எறிய அவ்விடம் வந்தனர். அங்கு வந்ததும், அன்னார் தம் காதலைப் போட மனமில்லாதவராய்த் தம் தலைகளை அசைத்துக்கொண்டே சென்றனர். கிழவிகள் தங்கள் உடல்திரைகளை எறிந்தார்கள். இளைஞர் பலர் தம் ஒழுங்கற்ற பற்கள், அழகற்ற உதடுகள் முதலியவைகளை எறிந்தனர். கூனன் ஒருவன் தன் முதுகில் இயற்கையாய் அமைந்த கூனை எறிந்தான். பொதுவாக நோக்கும் பொழுது, அத்துன்பமலை குறைவுடைய அங்கங்களையே பெரிதும் கொண்டிருந்தது. மக்கள் தங்களிடமிருந்த ஒன்றை வேறொன்றாக எண்ணி எறிந்தவையே அதிகம். இக்குவியலில் கெட்ட நடத்தைகளோ குற்றங்களோ எறியப்படவில்லை. மக்கள் இந்த நல்ல தருணத்தில் தங்கள் காமக்

குரோதாதிகளை எறிவார்கள் என்று நான் எண்ணினேன். ஆனால், ஒரு மூடன் தன் அறியாமையை எறிதற்குப் பதிலாகத் தன் நாணத்தை எறிந்தான். வேறொருவன் தன் குற்றங்களை எறிதற்குப் பதிலாக ஞாபகசக்தியை எறிந்தான்.

எல்லோர்க்கும் அது வரையிலும் உதவி செய்துகொண்டிருந்த கற்பனை என்னிடம் வந்தாள். அவள் வருகை எனக்குச் சிறிது வெறுப்பை உண்டாக்கிற்று. அவள் வந்ததும், தன்னிடமிருந்த பூதக்கண்ணாடியை என் முகத்திற்கு எதிரில் நீட்டினாள். என் முகம் அக்கண்ணாடியில் மிக ஒழுங்கற்ற நிலையில் தோன்றிற்று. அதனால் நான் ஒரு முக மூடியை வீசி எறிவதுபோல என் முகத்தை வீசி எறிந்தேன். என் அருகில் இருந்தவன் முகமும் அக்கண்ணாடியில் மிகப் பெரியதாய்த் தோன்றிற்று. அதனால் அவனும் தன் முகத்தை அக்குவியலில் எறிந்தான். அவனுடைய மோவாய்க் கட்டை என் முகமளவு நீண்டிருந்தது. மாந்தர் எல்லோரும் தம் துன்பங்களை எறிந்த பிறகு, "மாந்தரே, உம்மில் ஒவ்வொருவரும் உமக்கு வேண்டும் வேறு மூட்டையை எடுத்துக்கொள்க" என இறைவாக்கு வானில் எழுந்தது. கற்பனை என்னும் அம்மாதின் துணையால் மாந்தருள் ஒவ்வொருவரும் தத்தம் மூட்டைக்குப் பதிலாக வேறு மூட்டையை எடுத்துக்கொண்டனர்.

வெளுத்துச் சுருண்ட மயிரினையுடைய ஒரு வயோதிகர் தாம் எறிந்த சூலைநோய் மூட்டைக்குப் பதிலாக ஓர் அடக்கமில்லாப் பிள்ளையுள்ள மூட்டையைப் பெற்றார். அக்கெட்ட பிள்ளை அப்பெரியவரை அடைந்த கால்மணி நேரத்திற்குள், அவர் தாடியைப் பிடித்திழுத்து மூளையையும் கலக்க முயன்றான். அதற்குள் அவன் தந்தையார் சூலைநோயால் வருந்திக்கொண்டு அவனருகில் வந்தார். அவரைக் கண்டதும் அப்பெரியார் அப்பிள்ளையைப் பெற்றுக்கொண்டு தமது நோயையே தமக்குக் கொடுத்துவிடும்படி வேண்டினார். அது முடியாமல்போயிற்று. கூனன் மூத்திரப்பையில் கல்லைப் பெற்றான். என் நேசன் என் முகத்தைப் பெற்றான். நான் என் நெற்றியைத் தொட்டேன். ஆனால் என் விரல் மேல் உதட்டையே பிடித்தது. பின்பு, நான் என் கண் முதலிய உறுப்புக்களைத் தொட முயன்று முயன்று அவைகளைத் தொட இயலாது வருந்தினேன்.

அருள் மிக்க கடவுளின் வாக்கு மூன்றாம் முறை, "மக்களே, வருந்துதல் ஒழிக. நீங்கள் இப்பொழுது பெற்றவைகளைக் கொண்டுவந்து போட்டுவிடுக. உங்களிடத்தில் இருந்தவைகளையே இனி நீங்கள் பெறுவீர்கள்" என வானில் எழுந்தது. கற்பனைக்குப் பதிலாகப் பொறுமை

என்பாள் மக்களுக்குத் துணை செய்ய வந்தாள். அடிக்கடி அவள் நோக்கம் பரலோகத்தை நோக்கிய வண்ணமாய் இருந்தது. அவள் அவரவர் மூட்டையை அவரவருக்கு அளித்தாள். நானும் என் முகத்தைப் பெற்றேன்.

அது முதல் நான் பிறர் துன்பங்களைச் சரியாக மதிப்பிடுதற்கு எந்த மனிதனாலும் இயலாதென்பதை உணர்ந்தேன். என் துன்பத்திற்காக முணுமுணுத்தலையும், பிறர் இன்புறுதலைக் கண்டு பொறாமையுறுதலையும் நான் அறவே ஒழித்தேன். பின்னும், நான் மக்கள் துன்பங்களை மனிதப் பிறவிக்குரிய உணர்ச்சியோடும் இரக்கத்தோடும் நோக்கல்வேண்டுமென்று உறுதி கொண்டேன்.

8. சென்னைக் கடற்கரையின் காட்சி

ஒரு நாள் சுமார் நான்கு மணிக்கு நான் கடலின் தோற்றத்தைக் கண்டு களிக்கச் சென்றேன். வழியில் பல கட்டடங்களையும் பூந்தோட்டங்களையும் கண்டு, இன்பமனத்தினனாய்ச்சென்னை இராசதானிக் கல்லூரியின் பக்கம் யான் சென்று சேர்ந்தேன். இரயில் வண்டித் தொடர்போன்று நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் வண்டிகள் பல என் கண்களுக்கு விருந்தளித்தன. சில வண்டிகளில் ஐரோப்பியக் குழந்தைகளும், சில வண்டிகளில் இந்தியக் குழந்தைகளும் உட்கார்ந்து கொண்டிருந்தன. பல குழந்தைகள் வண்டியிலிருந்து குதித்திறங்கிக் கடலை நோக்கி ஓடிக் கொண்டிருந்தன. அழகிய இந்தியப் பெண்ணொருத்தி ஒரு மோட்டார் வண்டியைச் செலுத்திக்கொண்டு அவ்விடத்தில் வந்து சேர்ந்தாள். என் பக்கத்திலிருந்த இந்தியர், சிலர், "என்னே விந்தை! என்னே விந்தை!" எனச் சொல்லிக்கொண்டே நின்றனர்.

நான் சிறிது திரும்பினேன். ஒரு கிழவி என் பக்கத்தில் வந்து, "ஐயா, உன் வாய்க்கு

வெற்றிலே, எனக்கு ஒரு வேளைச் சாப்பாடு— காலணுக் கொடு—ஐயா!" என்று கேட்போர் மனம் உருகும் வண்ணம் கேட்டாள். என்னிடத்துச் சில்லறையாகப் பணம் இல்லை. அதனால், ரூபாய்க்குச் சில்லறை கொடுக்கக் கூடியவர் யாராவது வருகின்றாரா எனப் பின்பக்கம் திரும்பினேன். கண்டேன் ஓர் அழகனை! அவன் என் குறிப்பை அறியாது, "ஐயா, இக்கிழவியின் மடியில் இருக்கும் பணம் இவளுக்குப் பத்து நாட்களுக்கு உணவளிக்கும்; இவளுக்குப் பணத்தின்மீது வெகு ஆசை பிறந்துவிட்டது!" என்று சொல்லிக்கொண்டே கிழவியை உற்று நோக்கினான். பயத்தின் வயப்பட்ட கிழவி எங்களை விட்டு நீங்கினாள். அவ்வழகன் என்னை ஆலோசனையில் ஆழச் செய்தான்; கொடுப்பாரைத் தடுப்பார் பெறும் பயனை அவன் பெற்றிருப்பான்!

ஒருவன் கடலை விற்றுக்கொண்டு என் எதிரில் வந்தான். அவனை அவ்வழகன், "என்ன, ஐயா, விற்கின்றாய்?" எனக் கேட்டான். அதற்கு அந்த வியாபாரி, "கடலை விற்கின்றேன்" என்று பதிலளித்தான். உடனே அழகன், "கடலை நின்கூடை கொள்ளுமா?" என்றான். அந்த வியாபாரி தன் கூடைமீதிருந்த துணியை எடுத்தான். கடுகடுத்த முகத்தோடு அவ்

வழகன், “ஐயா, நீ பெரிய மோசக்காரன்; கடலை விற்பதாய்க் கூறி இத் தானியத்தைக் காட்டுகின்றாய். உன்னை நான் காவல் அதிகாரிகளிடம் சேர்க்கின்றேன், பார்!” எனக் கூறினான். அதனைக் கேட்டதும் அந்த வியாபாரி ஒரு புறம் பயமும், ஒரு புறம் கோபமும், ஒரு புறம் திகைப்பும் உடையவனாய் நின்றான். அவ்வழகன் அவனை வருத்துவதைக் கண்டு, நான் பெரிதும் வருந்திய மனத்தோடு அவ்விடம் விட்டு அகன்றேன். தம் இன்பங் கருதிப் பிறரை வருத்தும் மாந்தர் இவ்வுலகில் எண்ணிலர். அந்தோ! இவரும் மாந்தரோ!

ஒரு பக்கம் பலர் கூட்டமாய் உட்கார்ந்திருந்தனர். அங்கு நான் சென்றேன். அக் கூட்டத்தின் மத்தியில் நீண்ட அங்கியைத் தரித்த ஒருவன், “பெரியீர், கடவுள் ஒருவரே உண்டு. அவர்க்கு ஜாதி மதம் இன்ன பிற இல்லை. இயற்கையே அவர் உடல். உயிர்களிடம் அன்பு பூண்டு ஒழுகுபவரே அவர்க்குப் பெருந்தொண்டு செய்பவராவர்” என இறைவனைப் பற்றியும் மக்களைப் பற்றியும் விரிவாக உரைத்துக்கொண்டிருந்தான். அவ்வுரைகளைக் கேட்டுக்கொண்டிருந்த என்னை ஒரு சிறுவன் செயல் கவர்ந்தது. அச்சிறுவனுக்குச் சுமார் மூன்று வயதிருக்கும். அவன் தன்

பக்கத்தில் அமர்ந்திருந்த தன் தந்தையின் கைகள்மீது மணலை அள்ளி அள்ளி இறைத்துக் கொண்டிருந்தான். திடீரென்று அவன் தன் இருகைகளாலும் மணலை அள்ளித் தன் தந்தை மீது வீசி எறிந்தான். அம்மணற் பொடிகள் அப்பெரியோன் முகம் தலை முதலிய உறுப்புக்கள்மீது தவழ்ந்தன. அவன் கோபமுற்று, "அடே! பயலே, கண்களிலா மணலைக் கொட்டுனுய்!" என்று சொல்லிக்கொண்டே அச்சிறுவனைத் தண்டிக்கும் குறிப்போடு எழுந்தான். உடனே அச்சிறுவன் சுமார் பத்தடி ஓடிச் சிறிது குனிந்து, தன் இருகரங்களையும் தட்டிக் கொண்டு சிரித்தான். ஆ! சுருண்டு தொங்கிய சிகையினையும், திலகமணிந்த நெற்றியினையும், இன்பம் பொழியும் கண்ணினையும், அன்றலர்ந்த தாமரையில் முல்லைமொக்கு அமைத்தாலொத்த வாயினையும், நீலநிறம் வாய்ந்த அழகிய உடலினையும் பெற்ற அச்சிறுவனை நான் உற்று உற்று நோக்கினேன். அடிக்கச் சென்ற அவன் தந்தை அவன் நின்ற நிலையினைக் கண்டு பேரின்பமுற்று, அவனைத் தூக்கித் தன் மார்போடு அணைத்துக்கொண்டான். நான் அச்சிறுவன் பால் சென்றேன். அவன் என்னைக் கண்டு சிரித்தான்; ஆனால் என்னிடம் வந்திலன். நானும் நின்று நோக்கிப் பிரிந்தேன். என் ஆயுள்

நாளில் அவ்வொரு காட்சி இனிக் கிடைக்குமோ! யான் அறியேன்.

ஆசைமேலீட்டால் அலையும் மக்களே போன்று, வானில் பருந்துகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அங்கு ஒருபால் நின்று யான் பலப்பல எண்ணினேன். என் எண்ணம் முடிவு பெறும் முன்னமே, இன்னிசை என் செவியைக் கொண்டது. அவ்வோசை வந்தவழியே சென்று, சிறிதுபொழுது இசை வயப்பட்டேன்.

பின்னர் யான் கரையோரம் சென்றேன். 'எம்பால் வருக! எம்பொருள் கொள்க!' என்று அழைப்பனபோன்று அலைகள் காட்சி வழங்கின. ஒருபால் செம்படவர்கள் மீன்களை விற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்தம் சிறுவர் போர்க் களம் புகுந்து போர்புரியும் வீரரே போன்று அலைகளைத் தாக்கி விளையாடிக்கொண்டிருந்தனர்.

காற்றின் பொருட்டு வந்திருந்த சிறுவர் சிறுமியர் மணலில் வீடுகட்டி விளையாடிக்கொண்டிருந்தனர். சிறுமியர் கட்டிய மணல் வீடுகளைச் சிறுவர் சிலர் அழித்து அன்னாரை வருத்தினர். அச்சிறுவர்க்குத் துணையாகவே அலைகளும் நின்றன. சூரிய கிரணத்தால் கிளிஞ்சில்கள் மின்னின. அவைகளைச் சிறுவர்கள் செல்வப்பொருளெனச் சேர்த்துக்கொண்டிருந்தார்கள்.

சிறுசிறு நண்டுகள், தம்மைப் பின்தொடர்ந்து வருகின்ற கயவரினின்று தப்பித்துக்கொள்ளப் பதுங்கிப் பதுங்கி ஓடும் மனிதரே போன்று, வளைகளில் நுழைவதும் வெளிவருவதுமாய் இருந்தன.

கதிரவன் மேற்றிசை மறைந்தான். இருளென்னும் மாது உலகைக் கைக்கொள்ள முயன்ருள். அதனை உணர்ந்த சந்திரன் தண்ணொளி பரப்பும் தன் கிரணங்களோடு கடலிடைத் தோன்றினன். தென்றற் காற்றும் மெல்லென வீசிற்று. யான் என்னையும் மறந்து இயற்கைப் பொருள்களுள் ஒன்ருயினேன்.

9. இந்தியரும் சிற்பக் கலையும்

அறிவு வளர்ச்சியினால் வெளிப்படும் கலைகள் பலவற்றுள் சிற்பக் கலை ஒன்று. இதனை வருவாய்க்கமைந்த வழியேயெனக் கற்பார் பெறும் பயன் அற்பமே. ஆனால், இக்கலையைக் கலையுணர்ச்சிக்கென்றே கற்பார் இறுதியில் வித்தகராய்த் திகழ்வர். இறைவனை அறிய விரும்புவார் முதலாகப் பெற முயல்வது மனவடக்கமே. இதனை யோகியர் தம் யோகத்தாற் பெறுவர்; மற்றவர் தத்தமக்கு அமைந்த வழிகளின் உதவியாற் பெறுவர். ஆனால், சிற்பிகள் தங்கள் கலையாற் பெறுகின்றார்கள். சிற்பம் ஒன்றினை இயற்றப் புகும் சிற்பி, முதலில் தான் அதனை எவ்வாறு இயற்றுதல்வேண்டுமென்று நீடு நினைந்து, மனவடக்கமுற்றுத் தன்னையும் மறந்து, சிற்ப நினைப்பொன்றேயாய்ச் சிற்ப வடிவமேயாகின்றான். பின்னுமவன் தான் தொடங்கிய சிற்பம் முடியும் வரையிலும் அதன் நினைப்பன்றி வேறு நினைப்பற்றவனாய், உண்டி யுறக்கங்களைத் துறக்கின்றான். உலகிலுள்ள பொருள்களில் எல்லாம் இறைவனே இருக்கின்றானாதலின், இந்நிலையை

ஆயுட் பரியந்தம் எய்துமவன் வித்தகனாய் விளங்குகின்றான் என்பது மிகையோ? அவ்வித் தகன் இயற்றும் சிற்பமே உயிருடைத்தாகும். இவ்வுண்மையைச் சிற்பக்கலைப் பயிற்சியோ, ஓவியக்கலைப் பயிற்சியோ உடையாரும் கூரிய மதியுடையாருமே அறிவர். இச்சிற்பிகள் தாங்கள் செய்யும் சிற்பங்களுக்குப் பொருள் பெறுவார்களாயினும் அதுவே இவர்களுக்கு முக்கிய நோக்கமன்று. மற்றும் இன்னோரின் சிற்பங்கள் விலை மதிக்கற்பாலனவல்ல. இது நிற்க.

சிற்பக் கலையுணர்ச்சியினை நம் நாட்டினர் பிறநாட்டிலிருந்தே பெற்றனர் என்று சரித்திர நூலாராய்ச்சியில் தேர்ச்சிபெற்ற அயல்நாட்டினர் கூறுகின்றனர். நம் நாட்டினரோ, இக்கலையுணர்ச்சி இங்கிருந்தே பிறநாடுகளுக்குச் சென்றிருத்தல்வேண்டுமெனக் கருதுகின்றனர். இவ்விருதிறத்தாருள் யாவர் மொழி உண்மையாயினும் ஆகுக. அயல்நாட்டுச் சிற்பக் கலைக்கும் இந்தியச் சிற்பக் கலைக்கும் பேதமுண்டு. அயல்நாட்டுச் சிற்பிகளுள் பெரும்பாலோர் தாம் நேரிற் கண்ட உருவங்களையே இயற்றினர். நம் நாட்டுச் சிற்பிகளோ இயற்கை உருவங்களுக்குச் சிறிது மாறாகவே இயற்றியுளர். அச்செயல் அவர் பாலதன்று. நம் முனிபுங்கவர் தத்தம் அறிவுக்கியைய

இறைவன் திருவுருவத்தை மனத்திற்கொண்டு தியானம் செய்யலாயினர். பின்னர் அன்னோர் தாம்தாம் கொண்ட தியான உருவங்களைக் கல், மண், மரம் முதலியவைகளில் வேலை செய்ய வல்லாரைக் கொண்டு படைத்துக்கொண்டனர். ஆதலின், இந்நாள் நாம், எல்லாம் வல்லவனாய், யாண்டும் இருப்பவனாய், எப்பொருட்கும் தலைவனாய் நிற்கும் இறைவன்றன் திருவுருவம் பலவிதமிருக்கக் காண்கின்றோம். பின்னிருந்த அறிஞர், முனிபுங்கவர் செயலால் இறைவன் திருவுருவச் சிலைகள் பெருகுதலைக் கண்டு, சாதாரண மக்கள் இறைவன் திருவுருவம் யாதோ என மயங்கிக் கடவுள் நம்பிக்கையை இழந்துவிடுவர் என்றெண்ணி, முன்னாள் தோன்றிய உருவங்களை இலக்கியமாகக் கொண்டு, உருவங்கள் இவ்விவ்வகையில் அமையவேண்டுமென விதித்தனர். நம் மக்கட்குக் கடவுள் நம்பிக்கை அதிகமாதலால், சிற்பிகளுட் பெரும்பாலோர் கடவுள் திருவுருவங்களையே யாண்டும் விதித்தவாறு செய்யலாயினர். எனினும், நாட்டு வழக்க ஒழுக்கங்களுக்கேற்ப உருவச் சிலைகளில் பேதங்கள் தோன்றின.

இந்திய உருவச்சிலைகள் உடலமைப்புச் சாத்திரத்திற்குப் பொருந்த அமையாமையைக்

கருதி அயல்நாட்டினர், 'இந்தியச் சிற்பங்களும் சிற்பங்களோ!' எனப் பழிக்கின்றனர். நுட்பமான வேலைப்பாடு அமைந்த உயிருடை உருவங்களை இயற்றிய சிற்பிகளுக்குக் கண்காணும் உருவங்களை இயற்றல் அருமையோ? பௌத்தச் சிலைகளையும், கடவுள் உருவச் சிலைகளையும், மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தின் தூண்களிலுள்ள உருவங்களையும், மகாபலிபுரம் முதலிய இடங்களிலுள்ள உருவங்களையும் நன்னோக்கொடு காணுவார் நந்தம் சிற்பிகளின் திறமையை வியக்காமற்போகார். ஆதலின், இந்நாள் மக்களாகிய நாம் வீணில் காலத்தைப் போக்காமல், நம்முன்னோர் பயின்ற கலைகளையே பயின்றுவருவோமானால், நாம் நம்மை உயர்த்திக் கொள்ளுவதன்றி, நம்நாட்டிற்கும் சிறந்த மக்களாகக் கருதப்படுவோம்.

வாழ்கஇவ் வையகம்! வாழ்கநற் கலைகள்!
வாழ்கநல் லறிஞர் வழிவழி சிறந்தே!

10. செஞ்சிக் கோட்டை

நந்தமிழ் நாட்டிற் பண்டை நாளிற் பல்வளங்களோங்கித் திகழ்ந்த நகரங்கள் பலவற்றுள்ளும் செஞ்சி நகருமொன்றென்பதை அறியாதார் ஒருவருமிலர். அந்நகர், ஒருகால் ஜயசிங்கு மன்னர் முதலியோர் ஆட்சிக்குட்பட்டு விளங்கிற்று. அதன் எல்லைக்குள் வடக்குத் தெற்காகத் தெளிந்த நீருடைய ஆறொன்று, எருமையன்ன கருங்கற்கள் இடையிடையே அமையப் பெற்று அழகிய தோற்றத்தோடு பாய்கிறது. அதனைக் கடந்து சிறிது தூரம் செல்லின், பல கட்டடங்களைத் தங்கள் உச்சியிற்கொண்ட இரண்டு மலைகள் தோன்றுகின்றன. அம்மலைகளை நோக்கிச் செல்லும் வழியில், இடையிடையே அழகிய வீடுகளையும் பச்சைப்பசேரென்ற வயல்களையும் பார்த்துக்கொண்டே போவோமானல், பெரிதும் தூர்ந்து, உடைந்த கரைகளை இருமருங்கும் பெற்று, அற்பப் பிராணிகளும் அசட்டை செய்யும் ஆழமுடைத்தாய்ப் பாழே உருவெடுத்தாற் போன்றதோரகழியைக் காணலாம். அதனைச் சார்ந்து அகன்றுயர்ந்து அழிவுற்ற உறுப்புக்கள்

பல கொண்டு, வடக்குத் தெற்காகச் சென்று இரண்டு மலைச்சரிவுகளைச் சேர்க்கின்ற கோட்டைச் சுவரொன்று, படுகாயப்பட்டும் வீரங் குன்றா வீரனை போன்று நிற்கின்றது.

அச்சுவரில் அமைந்துள்ள வாயிலைக் கடந்து உட்சென்றதும், வலப்பக்கம் இராசகிரி என்று கூறப்பெறும் ஒரு சிறு மலை, மக்கள் தன் உச்சியை அடைதற்பொருட்டு அமைக்கப் பட்டுள்ள மூன்று வழிகளுடன் சற்றேறக்குறைய **370** அடி உயரமுடையதாய் விளங்குகின்றது. அம்மலையின் படிகள் யாவும் செம்மையாய் அமைந்துளவேனும், பெரிதும் மனிதர் போக் கின்மையால், போவார்க்குப் பெருந்துன்பத்தை விளைக்கின்றன. உச்சியிற் சபாமண்டபமொன்று, அரசர் அமர்வதற்கு ஓரழகிய மேடையையும் நான்கு பக்கங்களில் நான்கு திண்ணைகளையும் பெற்று ஓங்கியுயர்ந்து, காண்பார் மனத்தைக் கவர் கிறது. அவ்வழகிய மண்டபத்திற்கருகில், நாற் றிசையும் அழிவுற்று இருட்டிற்கிருப்பிடமாய், ஆந்தையும், கழுகும் அழுதற்கமைந்த வீடேயாய், கோ இன்றியுங் கோயிலெனப் பெய ரளவிலிருக்கும் ஆலயமொன்றைக் காணலாம். அதன் பக்கலொரு நீர்ச்சுனை பண்டு மக்கட்குப் பெரும்பயன் அளித்து, இன்று கருதுவாரின்றி யிருக்கின்றது.

ஒருபால், ஏறக்குறைய 70 அடி நீளமும் 37 அடி அகலமும் 30 அடி உயரமுமுள்ள ஒரு பெரிய கட்டடம், அங்குப் போவாரைத் தன்னிடம் வருக என்றழைப்பது போன்று உயர்ந்திருக்கின்றது. அப்பெருங்கட்டடத்திற்கு அமைந்த சுவர்கள் நான்கோடு, குறுக்குச் சுவரைச் சார்ந்து அதற்குட்பக்கத்தில் மேலேறுதற்கென்று கட்டப்பட்ட சுமார் 2 அடி நீளமுள்ள படிகள் உள்ளிருப்பார்க்குத் தோன்ருதவாறு எழுப்பப்பட்ட ஐந்தாஞ் சுவரொன்றுமுண்டு. அச்சுவர்களுக்குமேல் வானம் கவிந்தாற்போன்ற ஒரு பெரிய வளைவுப் பதுங்கு வேருதரவின்றிப் பொருந்தி இருக்கின்றது. அக்கட்டடத்துள் பொருந்துதற்கு இரும்பும் மரமும் தவஞ்செய்தில. ஏறக்குறைய $2\frac{1}{2}$ அடி அகலமும் 6 அடி உயரமுமுள்ள ஒரு வாயிலும், உத்தேசம் 2 அடி அகலமும் 6 அடி உயரமுமுள்ள ஒரு படி வாயிலுமன்றி, சற்றேறக்குறைய 3 அடி அகலமும் 2 அடி உயரமுமுள்ள இரண்டு பலகணிகளும், மேற்பதுங்கில் சுமார் $1\frac{3}{4}$ அடி நடு அளவுள்ள ஒரு வட்டமான துவாரமும் அக்கட்டடத்தில் காணப்படுகின்றன. அதனருகில், கவனிப்பாரின்மையால் மேற்பதுங்கில் பெரும் பிளவுள்ள மேற்கூறிய அளவுள்ள கட்டடமொன்று இருக்கின்றது. அதனை ஒரு சுவர்

இரண்டறைகளாகப் பிரிக்கின்றதெனினும், அது பதுங்களவு உயர்த்தப்படவில்லை. அச்சுவர் அரசாங்கத்தாரால் சில வருடங்களுக்குமுன் மேற்பதுங்கைத் தாங்குதற்கென்று எழுப்பப் பட்டதென்றும், யாதோ தடையால் அஃது இடையே நிறுத்தப்பட்டதென்றும் அந்நகர மக்கள் கூறுகின்றார்கள். இவைகளேயன்றிச் சில சிறு கட்டடங்களும் அழிவுற்றிருக்கின்றன.

மலையை விட்டுக் கீழிறங்கிச் சிறிது தூரம் செல்லின், இராணிகிரியை நோக்கிச் செல்லும் வழியில், அரசர் அந்தணர் வணிகர் வேளாளர் எனும் நாற்பாற்பட்ட மக்கள் இருத்தற்கு இட மாய் நின்றழிந்த மாளிகைகளின் சின்னங்களைக் காணலாம். சில கஜங்களுக்கப்பால், மலைமீதேற முதலாக நுழைதற்கென்று பொருந்திய வாயில் முன் ஓர் அகழி மலையைச் சார்ந்து செல்கின்றது. அவ்வாயிலுக்கெதிரில், நன்னிலையில் ஒரு மசூதி ஜயசிங்கு மன்னர்க்குப் பின்னிருந்த மகமதியர் காலத்தில் கட்டப்பட்டு, இன்றும் புதிய நிலைமையிலிருக்கின்றது. ஆயினும், அஃது உப யோகிப்பாரின்மையால், வெகு சீக்கிரத்தில் அழி வுற்றுச் சிதைந்தழிந்த மற்றவைகளோடு ஒன்றாக வைத்தெண்ணும் தன்மையை அடையும் என்பதற்கோர் ஐயமில்லை. அதனருகில் ஆலய மொன்று பாழ்பட்டு மனிதர் போக்கின்றி, நாய்க்

கும் நரிக்கும் அமைந்த வீடாய் இருக்கக் காண லாம். அதற்கு அரணாக நாற்றிசையும் நான்கு பெருமதில்கள் உயரமும் பலமும் பெற எழுப்பப் பட்டிருக்கின்றன. ஆயிரக்கால் மண்டப மொன்று, மேற்பாவியிருந்த கற்கள் பல கீழ்ச் சரிந்தும், கால்கள் பல பூமியிற் புதைந்தும் சீர் குலைந்திருக்கின்றது. அழகிய கிணறொன்று, சூரிய கிரணம் படாநிலைமையிலும் தெளிந்த நீருடன், அழிந்த ஆலயத்தின் அழகு அடி யோடு கெட்டுப்போகாதவாறு காக்க நிற்பது போன்று அமைந்திருக்கக் காணலாம். மிகவும் விசாலமாகக் கட்டப்பட்ட அக்கோயில், ஒரு சமயம் நூற்றுக் கணக்கான மக்கட்கு இடம் கொடுத்து, இன்று பயமற்று ஒருவன் தங்க இயலாத நிலைமையிலிருப்பது என்னே! தூண் களிலும் சுவர்களிலும் அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டில்லை எனினும், அவ்வாலயம் ஆதியில் சுத்தமான வேலைப்பாடமையக் கட்டப் பட்டதென்பதை எவரும் மறுத்தலியலாது. அதன் உள்ளும் புறமும் சுற்றிச்சுற்றிப் பார்ப்பி னும், விக்கிரகம் ஒன்றையேனும் காண்பதரிது. அதற்கு எதிரில் ஏறக்குறைய 17 அடி உயரமும் $1\frac{3}{4}$ அடிச் சதுரமுமுள்ள கருங்கற்கம்பம் பல பட்டைகளுடன் விளங்குகின்றது. அதற்குக் கிழக்கில் ஒரு சிறு கட்டடமிருக்கிறது. அதனை,

மக்கள் ஆங்கிருந்த சிறைச்சாலை என்று கூறு கின்றார்கள். ஆனால், அஃது இப்பொழுதிருக்கும் நிலைமையால் உண்மையை அறிதற்கிடமில்லை.

இராணிகிரியின் வாயிலையடைந்து, பல மதில் களைக் கடந்து உட்சென்றதும், ஒரு பெரு வெளியை அடையலாம். ஆண்டுச் சற்றேறக் குறைய இருபதுக்கிருபதடிச் சதுரமுள்ள 'கலியாண மஹால்' என்ற பெயர் பெற்ற ஒரு செங்கற்கட்டடம் ஏழு அடுக்குடன் புத்தம் புதியதாய் விளங்குகின்றது. அதன் அமைப்பும் வேலைப்பாடும் முற்கூறப்பட்ட மசூதியை ஒத் திருப்பதால், அதுவும் மகமதியர் காலத்தில் கட்டப்பட்டதாகவே இருத்தல்வேண்டும். அக் கட்டடத்தில் ஒன்றின்மேலொன்றாகப் பொருந் திய அறைகள் ஏழும் தெற்குத் திசையை நோக்கியுள்ளன. கிழக்குப் பக்கமும் மேற்குப் பக்கமுமிருக்கும் சுவர்களில் இரண்டிரண்டு வாயில் கள் இருக்கின்றன. அவ்வாயில்களுக்கமைந்த படி களின் சூழ்ச்சியை நேரிற் கண்டே அனுபவித்தல் வேண்டும். சில அடிகளுக்கப்பால் உத்தேசம் பதினேழுக்குப் பதினேழடிச் சதுரமும் 6 அங் குலக் கனமுமுள்ள சுத்தமாகத் தேய்க்கப்பட்ட ஒரு கருங்கல், ஏறக்குறைய 7 அடி நீளமுள்ள சுத்தமாகத் தேய்க்கப்பட்ட குழவியைப் பக்கலில் பெற்று விளங்குகின்றது. ஆனால்,

அச்சதுரக்கல் பல துண்டுகளாய் உடைந்த நிலையில் இப்பொழுதிருக்கின்றது. பின்னும், இராசகிரியிற் கூறிய பெரிய கட்டடத்தைப் போன்ற மூன்று கட்டடங்கள் ஒன்ருகச் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கின்றன. அந்நகர மக்கள் அக் கட்டடத்திலுள்ள மூன்று அறைகளும், நெல் கேழ்வரகு கம்பு முதலியன சேமித்து வைப்பதற்காகக் கட்டப்பட்டன என்று கூறுகின்ருர்கள். இவைகளேயன்றித் தொடர்ச்சியாய்ச் சில சிறு கட்டடங்களும், எண்ணெய் சேமித்து வைப்பதற்காகப் பூமியில் ஒரு சிறு கட்டடமும், 'கொட்டடிஹால்' என்கின்ற பெரியதொரு கட்டடமும் இருக்கின்றன.

பின்னர், ஏறக்குறைய 700 அடி உயரமுள்ள மலைமீதேறிப் பல நூற்றுக்கணக்கான படிகளையும் ஓரிருப்புப் பாலத்தையும் கடந்து மேற்சென்ருல்,மலையின் உச்சியை அடையலாம். மலைமீது சரிவான பாகங்களில் பகைவர் எளிதாக மேலேருவண்ணம் பல சுவர்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. ஆண்டு இராசகிரியின் கட்டடங்களைப் போன்ற மூன்று கட்டடங்கள் வெவ்வேறிடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனல், அவைகளில் ஒன்று, பல தூண்களையும் ஓரிரும்புக் கதவினையும் பெற்று அழகாக விளங்குகின்றது. அவ்விரும்புக் கதவு சில வருடங்

களுக்கு முன் அரசாங்கத்தாரால் அக்கட்டடம், பழுது பார்க்கப்பட்ட பொழுது அமைக்கப்பட்டதென்று அங்கிருப்பவர்கள் கூறுகின்றார்கள். மற்றொரு கட்டடம், இடிந்தழிந்து பாழாய்க் கிடக்கின்றது. வேறொன்று இன்னும் வசித்தற்கு யோக்கியமாயிருக்கின்றது. பின்னும், சுமார் $10\frac{1}{2}$ அடி நீளமுள்ள ஒரு பீரங்கியும், செங்கற்களால் கட்டப்பட்ட ஒரு மணிக்கூண்டும், பாழ்பட்ட ஒரு கோயிலும், சில கட்டடங்களும், நீருள்ள மூன்று சுனைகளும் காணப்படுகின்றன. அம்மூன்று சுனைகளில் ஒன்றிலுள்ள நீர் குடித்தற்குத் தகுதியுடையதாய் இருக்கின்றது. ஒரு பள்ளத்தில் சுமார் 60 அடி நீளமும் 30 அடி அகலமுமுள்ள ஒரு செங்கற்கட்டடமும், உட்சென்று பார்க்க இயலாத நிலைமையில் இருக்கின்றது.

தென்னாட்டின் அழகையும் பண்டைச் சிறப்பையும் தெளிவாக விளக்கும் கருவிகளில் பாழடைந்துள்ள செஞ்சிநகரும் ஒன்று. ஆதலின், தமிழரும் பிறரும் இதன் பண்டைச் சிறப்பியல்களையும் இன்றுள்ள நிலைமையினையும் நேரிற் கண்டுணரல்வேண்டுமென்பதே இக்கட்டுரையின் நோக்கம். கற்றோர்க்கும் மற்றோர்க்கும் கண்ணுக்கும் மனத்துக்கும் விருந்தளிக்கும் செஞ்சிக் கோட்டையைக் காணாது கழியும் வாழ்க்கை,

தென்னாட்டிற் பிறந்தும் அந்நாட்டின் பயன் நுகர்ந்தறியா வாழ்க்கையேயாகும் என்பது திண்ணம்

11. வழியில் ஒரு பெரியார்

சில ஆண்டுகளுக்கு முன், யான் மதுரையம் பதியை அடைந்து சின்னாள் வாழ்ந்துவந்தேன். ஒருநாட்காலை, யான் வைகையில் நீராடி, மீனாட்சி அம்மையின் ஆலயத்தை நோக்கிச் செல்லலாயி னேன். எனக்கருகில் சிலர் அம்மையின் திரு வுருவத்தைக் கண்டு களிக்க வரலாயினர். அவர் களில் ஒருவர் வெளுத்துச் சுருண்ட நீண்ட மயி ரினையும், திலகமணிந்த நெற்றியினையும், அரு ளொழுகும் கண்ணினையும், துன்ப உருவினரை இன்ப உருவினராக்கும் இனியமுறுவலையும், பரந் துயர்ந்த மார்பினையும், சிறந்த இலக்கணம் யாவும் அமையப்பெற்ற மற்ற உறுப்புக்களையும் உடைய ராய் விளங்கினார். அவர்களுக்குள் ஒருவர் அப் பெரியாரை நோக்கி, "அடிகாள், இவ்வுலகில் நல்ல வர்களுக்குத் தீமையும், தீயவர்களுக்கு நன்மை யும் உண்டாகின்றனவே. இறைவன் இங்ஙனம் நடத்துதல் நியாயமோ?" என வினவினார். அதற்கவர், "நண்ப, இறைவன் உள்ளத்தை அறிவதற்குரிய முயற்சி நாம் என்செய்தோம்! முயற்சி இன்றி வாளா இருக்கும் நாம் இறைவ

னைக் குறைகூறுதல் நியாயமோ? இந்நாள் மக்கள் இறைவன் நிலையிலேயே ஐயப்பாடுடையவர்களாயும், அவன் உள்ளத்தை அறிய இயலாது அவனைக் குறைகூறுபவர்களாயும் இருக்கின்றார்கள். அதற்குக் காரணம் அவர்கள் வாழ்வாங்கு வாழும் நெறியைக் கைவிட்டமையே! ஆதலால், நண்ப, அறநெறியைக் கைவிடாது இலக்கியப்பயிற்சி உடையவராய் வாழ்கின்றவர் எதையும் சிந்தித்தற்குரிய நுட்பமனம் உடையவராவர்; அம்மனப் பண்பால் அறிவு நூல்களைக் கற்று அறிவுடையவராய் விளங்குவர். இடைவிடாது பொருள்களின் உண்மைநிலையை ஆய்ந்துகொண்டேவருகின்ற அன்னார்க்கு அவர்தம் அறிவு ஒரு நிலையில் நின்று, 'நண்பரே, இனி என்னை நம்பாதீர். இந்நாள்வரை யான் எனக்கு இலக்காகாததொன்று இல்லை என்று எண்ணிவந்தேன். ஆனால், இன்று நான் என்னாலும் உணரமுடியாததொன்று உண்டென்பதையும், அதனை நான் என் சக்திகொண்டு உமக்கு அறிவிக்க இயலாதென்பதையும் அறிந்துகொண்டேன். அதனால், நீர் என்னை நம்பாமல், உணர்வினைத் துணைக்கொண்டு அறிவன அறிவீராக' என அன்னார்க்கு உணர்த்தி நிற்கும். பின்னர், அன்னார் உணர்வின் வழிநின்று, இடைவிடா ஊக்கத்தால், பற்றற்றான் தாளினைப் பற்றிப் பிறப்பறப் பெற்று,

உலகப்பற்று நீங்கி வாழ்வர். அவருக்குத்தான் இறைவன் உள்ளம் உணரும் நிலைமைத்தாகும். எனினும், நண்ப, நெறியுற இல்வாழ்க்கையுள் நின்று, என்றும் தம்முடன் நிற்கும் உணர்வால், இலக்கியப் பயிற்சி முதலிய இன்றி, இறைவன் உள்ளத்தை அறிய இயலாதோ என நீ ஐயுறலாம். உணர்வின் வழிநின்று இறைவன் உள்ளத்தை அறிதல் இயலும். ஆனால், உணர்வு, இறையுள்ளத்தை உணரும்வரையில் பிறவற்றால் கலக்கப் படாமல் இருத்தல்வேண்டும். இல்லையேல் பயனில்லை. தொத்து வியாதிகள் உள்ள இடத்தில் தான் அவைகளைத் தடைசெய்யக் காப்புக்கள் வேண்டும். இந்நாள் உணர்வினைக் கலக்கற்குரிய தொத்து வியாதிகள் பலப்பல உலவி வருகின்றன. ஆதலால், நான் முன்கூறிய முறையே மக்கட்கு நன்மை செய்வதாகும்'' எனக் கூறி முடித்தார். பின்னர் அவர்களுடன் யானும் கோயிலை அடைந்தேன்.

12. நோயின் காரணம்

நோயில்லா மாந்தரை இவ்வுலகில் காணல் அருமை. நோய் மனநோய், உடல்நோய் என இரு வகைப்படும். மனநோய் அவரவர் அறிவின் நிலைக்கேற்றவாறு நின்று நிலவும். உடல்நோய் அவரவர் தத்தம் உடல்மேல் கொண்டுள்ள கவனிப்பின் தன்மைக்கேற்றவாறு அமையும். மனநோய் நீங்கி நிற்பவர் ஞானியர். ஆதலின், அந்நோய் ஞானத்தால் நீங்குவதொன்றாயிற்று. ஞானமோ பெருமுயற்சியால் பெறவல்லது. உடல்நோயோ சிறிது முன்னுணர்வுடையாரை அடைவதில்லை. அவ்வுணர்வும் இல்லா மனிதரை என்னென்று சொல்வது. ஊழ்வினையால் சில நோய்கள் தோன்றுகின்றன என்று சிலர் எண்ணுதல் கூடும். அக்கருத்தினை யாம் மறுக்கின்றோமில்லை. எனினும், மாந்தர்தம் அறிவிலாச் செயல்கள் அந்நோய்களைப் பின்னும் வளர்க்கின்றன என்பதை அறிதல்வேண்டும். பெரும்பாலும் அளவு கடந்து உண்ணுதலும், உண்ட உணவு செரிப்பதற்கு முன் உண்ணுதலும் உடல்நோய் உண்டாதற்குக் காரணமாகின்றன. போதிய அளவு

உணவு கொள்ளாவிட்டாலும் நோய் உண்டாகும். இவ்வுலகில் உடல்நோயால் வருந்துபவருள் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பதுபேர் அளவு கடந்து உண்பவரே. இவ்வுண்மையைப் பின்வரும் ஒருவர் வரலாறு நன்கு உணர்த்தும்:

சில ஆண்டுகளுக்கு முன் புதுச்சேரியில் தனவந்தர் ஒருவர் இருந்தார். அவர் அறிவை வளர்ப்பதைப் பார்க்கிலும் வயிற்றை வளர்ப்பதையே பெரிதாகக் கொண்டார். 'வயிற்றுக்கு வஞ்சனை செய்யாதே' என்னும் பழமொழியை எழுத்தெண்ணிக் கற்றவர் அவர். ஒருநாள் முழுதும் உண்டுகொண்டே இருத்தலில் அவர் பெரிதும் பழகினர். 'இன்று எவ்விதச் சுவையுள்ள பொருளை உண்பது? மிக்க சுவையுள்ள பொருள்களை எங்கிருந்து வருவிப்பது?' என்னும் சிந்தனைகளே அவர் மனத்தில் என்றும் குடிகொண்டிருந்தன. அதனால், பல ஆட்களை அவர் சிறந்த பானவகைகளும் பண்டவகைகளும் பெறக்கூடிய இடங்களில் வைத்திருந்தார். சுவையான பானவகைகளும் பண்டவகைகளும் கடைக்கு வந்தவுடன் அவைகளை அவர்கள் உடனே அவருக்கு அனுப்புதல்வேண்டும். வெளிநாடுகளில் கிடைக்கும் அரிய பண்டங்களைப் பற்றி அறிவித்தற்காக அவர் ஓர் எழுத்தாளனை அதிக சம்பளத்தில் வைத்திருந்தார்.

காலேஉண்டி முடிந்தவுடன், அவர் தமது புத்தக நிலேயத்திற்குப் போதல் வழக்கம். அங்குப் பல புத்தகங்கள் உண்டு. அவைகளை அவர் உபயோகித்தறியார். புத்தகாலயத்துள் நுழைந்தவுடன், அவர் ஒரு பெரிய சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொள்வார்; உடனே தம் தலைமைச் சமையற்காரனை வரும்படி கட்டளை இடுவார். அவன் வழக்கம்போலச் சில பானவகைகளைக் கொண்டுவருவான். அவர் அவைகளைப்பருகியதும், தாம் இளமையில் கற்ற இரண்டொரு சுவையற்ற பாடல்களைப் பாடுவார்; உடனே களைப்புத் தம் கண்களை மூடச் சிறிது கண்ணயர்வார்; அரைமணி நேரத்திற்குள் உணவுகொள்வதற்குரிய இடத்தையடைந்து உணவு வகைகளைக் கொண்டுவரும்படி கட்டளை இடுவார். உண்ண உட்கார்ந்தாராயின், அவர் திரும்பவும் எழுவதற்கு ஒன்றரை மணியாகும். அவர் உண்ணும் உணவின் வகைகள் சொல்லும் அளவின அல்ல. மாமிசவகைகள் பல. மற்றவை சில. பானவகைகள் பலப்பல. "இனி ஒரு பிடி உள்வந்தால் நான் வெடித்துவிடுவேன்" என்று வயிறு உணர்த்த அவர் அவ்விடம் விட்டு நகர்ந்த நாள் உண்டேயன்றி, பசி அடங்கிவிட்டது என்று எண்ணி எழுந்த நாளில்லே.

இவ்வித நிலேயில் அவர் பல ஆண்டுகள் கழித்

தார். கடைசியில், அவர் உடல் அளவுகடந்து பருத்துவிட்டது; வயிறு வண்ணான்சால் போல ஆயிற்று. ஓரடி நகர்வதற்கும் ஒன்பதாள் துணை வேண்டியிருந்தது. அஜீரணமும் அடிகோலிற்று. சுருங்கக் கூறின், அவர் மலையானார் எனலாம். அந்தோ பாவம்! கீல்வாதம் அவரை வருத்தத் தொடங்கிற்று. அதுமுதல் அவர் இருந்த இடத்தைவிட்டு அசைந்தாரில்லை. எல்லாக்காரியங்களும் அவ்விடத்திலேயே நடந்தன. இவ்வித நிலையிலும் உண்ணும் உணவினை அவர் மாற்றவில்லை.

நோயின் வேகத்தால் அவர் மனம் தளர்ந்து, ஒரு வைத்தியரை வருவித்தார். அவ்வைத்தியர் அவ்வூரில் மிகவும் பெயர் பெற்றவர். அவர் வந்ததும் தனவந்தர் அவரை நோக்கி, “பெரியீர், நான் என்ன நிலையில் இன்று இருக்கிறேன் பாரும்!” என்றார். அதற்கவர், “நீர் பானவகைகளும் உண்டிவகைகளும் அதிகம் உபயோகித்திருத்தல் வேண்டுமென யான் எண்ணுகின்றேன்” என்றார். அதனைக் கேட்டதும் தனவந்தர், “பெரியீர், நான் என்றும் மிதமான உணவே உண்டுவருகின்றேன். திராட்சை ரசம் முதலிய பானவகைகளைப் பருகி யான் மதிமயங்கி இருந்தது என்றுமே இல்லை” என்றார். அதற்கு வைத்தியர், “நீர் அதிகமாக உறங்கும்

வழக்கத்தையேனும் மேற்கொண்டிருத்தல் வேண்டும்'' என்றார். அதற்குத் தனவந்தர், "வைத்தியரே, நான் இரவில் பன்னிரண்டு மணி நேரம் படுக்கையில் இருப்பது மெய்யே. ஆனால், கண்மூடி உறங்கிய நாள் ஒருநாளுமில்லை'' எனப் பெரிதும் வருத்தத்தோடு பதிலளித்தார். உடனே வைத்தியர் "செல்வரே, உறக்கமின்மை உடலுக்கு ஊறு செய்யுமே!'' என்றார். "அதனால்தான் நான் பகலில் மூன்று நான்கு முறை சிறிது சிறிது உறங்கிவருகின்றேன்'' என்றார் தனவந்தர். பிறகு வைத்தியர் தனவந்தரைக் கூர்ந்து நோக்கி, "நீர் உடற்பயிற்சி ஏதாவது செய்வதுண்டா?'' எனக் கேட்டார். அதற்குத் தனவந்தர், "வைத்தியரே, நான் சுகமாய் இருந்த பொழுது வண்டியில் வாரத்திற்கு இரண்டுமுறை வெளியில் போதல் உண்டு. ஆனால், இந்நோய் என்னை அடைந்தது முதல் நான் இருந்த இடத்தைவிட்டு அசைவதே இல்லை. சிறிது அசையினும், என் உடல்முழுதும் பெருவலி உண்டாகின்றது'' என்று கூறினார்.

வைத்தியர் சிறிது சிந்தித்துத் தனவந்தரை நோக்கி, "நண்பரே, உமது நோய் மிகவும் கொடுமையானது. நீர் இந்நாள் உண்டுவரும் உண்டிவகைகளையும், பருகிவரும் பானவகைகளையும் பெரிதும் குறைத்துவிடல்வேண்டும்.

ஒரு நாளுக்கு ஏழு மணி நேரத்திற்குமேல் உறங்கல் ஆகாது. அதிலும், பகலில் உறங்குதல் பெருந்தீது. இம்முறையை நீர் அனுசரியா விடில், நோய் பலம் அடைந்துகொண்டே வந்து, உமக்குப் பேரிடரை உண்டாக்கும்'' என்றார்.

இவ்வுரைகள் தனவந்தருக்கு நோயினும் பெருந்துன்பத்தைச் செய்தன. அதனால் அவர் வைத்தியரை நோக்கி, "பெரியீர், உம் பெயர் நாடெங்கும் பரவி இருக்கின்றது! உணவு பான வகைகளைக் குறைக்காமல் என் நோயைப் போக்குதல் உம்மால் ஆகாதா? இன்று நான் உட்கொள்ளும் உணவு பானவகைகளே எனக்குப் போதிய அளவு உடல் வன்மையைத் தரவில்லையாயின், அவற்றையும் குறைத்துவிட்டால் என் உடல்நிலை என்னாகும்!'' என மொழிந்தார். வைத்தியர் அவ்வுரைகளைக் கேட்டு, "பெரியீர், இன்று நீர் நோயால் வருந்துதற்குக் காரணம் அவ்வுணவு பானவகைகளே. அவைகளைக் குறைக்காவிடில் நன்மை ஏற்படாது. உமக்கோ, அவற்றைக் குறைக்க விருப்பம் இல்லை. ஆதலின், என்னால் உமது நோயைத் தீர்க்க முடியாது. திண்டிவனத்தில் பெரும் புகழோடு வாழும் என் நண்பர் இராமலிங்கத்திற்கு யான் ஒரு கடிதம் தருகிறேன். அவர் ஒரு வேளை உமது நோயைப் போக்கலாம்'' என்று சொல்லி ஒரு கடிதம் எழுதித் தந்தார்.

தனவந்தர்க்கு வைத்தியர்மீது வெறுப்புத் தோன்றிற்று. திண்டிவனம் போதற்கு அவர்க்கு விருப்பம் இல்லை. அதனால் அவர் வைத்தியருக்கு விடை அளித்து மௌனத்தில் ஆழ்ந்தார்.

சில நாட்கள் கழிந்தன. தீராத நோய் நாளுக்கு நாள் அதிகப்பட்டுக்கொண்டே வந்தது. திண்டிவனம் இராமலிங்க வைத்தியரின் நினைப்புத் தனவந்தரை விட்டு நீங்கவில்லை. ஒரு நாள் அவர் திண்டிவன வைத்தியரைக் காணப் புறப்பட்டார். அவர் அமர்ந்திருந்த வண்டியை இரண்டு வண்டிகள் தொடர்ந்தன. ஒரு வண்டியில் உணவு பானவகைகள் நிறைந் திருந்தன. மற்றொரு வண்டியில் சமையல் ஆட்களும் மற்றவர்களும் இருந்தார்கள்.

வண்டிகள் திண்டிவனத்து வைத்தியர் வீட்டை அடைந்தன. அந்தோ! பிரயாணத் தால் தனவந்தர் பட்டபாடு தெய்வத்திற்கே தெரியும். பெருமுயற்சியால் ஆட்கள் தன வந்தரை வைத்தியர் வீட்டின் முற்றத்தில் சேர்த்தார்கள். அச்சமயத்தில் வைத்தியர் இராமலிங்கம், உணவின்மையால் நோய்வாய்ப் பட்டுத் தம்மிடம் வந்திருந்த சிலர்க்கு விருந் தளித்தார்; சிலரை அழைத்து, "நண்பர்களே, நீங்கள் இவ்வினிய திராட்சை ரசத்தைப் பருகுங் கள். இஃது உங்களுக்குப் பெருநன்மையை

உண்டாக்கும்'' என்று சொல்லி, அவர்களுக்குப் போதுமான அளவு திராட்சைரசம் கொடுத்தார். அவர் ஒருவரைப் பார்த்து, ''நண்பரே, நீர் இதுவரையிலும் கொண்ட உணவைப் பார்க்கிலும் சிறிது இன்று அதிகமாகக் கொள்ளவேண்டும்'' என்றார். இந்நிகழ்ச்சியைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்த தனவந்தர்க்கு அளவிலா இன்பம் உண்டாயிற்று.

வைத்தியர் அவர்களை எல்லாம் அனுப்பிவிட்டுத் தனவந்தரையடைந்து, மிகவும் வணக்கத்தோடு, ''பெரியீர், உமக்கு என்ன வேண்டும்?'' என்றார். உடனே தனவந்தர் அவரிடம் புதுச்சேரி வைத்தியர் தந்த கடிதத்தைக் கொடுத்தார். அக்கடிதத்தைப் படித்த பிறகு, அவர் தனவந்தரை நோக்கி, ''பெரியீர், என் நண்பர் எழுதிய கடிதம் உமது நோயை நன்கு எடுத்து விளக்குகின்றது. உம் நோயைப் போக்குவது கஷ்டமே. ஆனால், நீர் மனத்தளர்ச்சி அடையவேண்டா. நான் சொல்லும் விதம் நீர் கேட்பீரானால், அதை அடியோடு போக்குவேன். முதலாவது, நீர் உம் ஆட்களை அனுப்பிவிடவேண்டும். குறைந்த அளவு ஒரு மாதகாலம் நான் கொடுக்கும் உணவை உண்டு என்னோடு நீர் வாழ்தல்வேண்டும். இக்கட்டுப்பாடுகளுக்கு நீர் உட்படுவீரானால், நான் உமது நோயைப் போக்கல் இயலும்'' என்றார்.

மற்றவர்களுக்கு நடந்த உபசாரமே தமக்கும் நடக்கும் என்ற எண்ணத்தால், உடனே தன வந்தர் தம் ஆட்களை ஒரு மாதத்திற்குப் பிறகு வரும்படி கட்டளையிட்டு அனுப்பினார். வைத்தி யர் இரவு ஏழுமணிக்கு உணவு அளிப்பதாகக் கூறி, மற்றக் காரியங்களை நோக்கச் சென்றார். மணி நான்கு ஆயிற்று. அந்தோ பாவம்! ஒரு மணிக்கு இரண்டு மூன்று முறை பானங்களும் மற்றவைகளும் உட்கொள்ளும் வழக்கமுள்ள வர்க்கு ஒருமணியிலிருந்து நான்கு மணிவரையி லும் ஒன்றுமில்லையாயின், மனம் எப்படி இருக் கும்! வைத்தியரோ, மாலை ஏழுமணிக்கு உண வளிப்பதாகச் சொல்லிச் சென்றார். தனவந்த ரிடம் ஒன்றும் இல்லை. பொறுமையோடு அவர் வருவார் போவாரைப் பார்த்துக்கொண்டிருந் தார். மணி ஐந்து ஆயிற்று. பசி உண்மையில் உண் டாகவில்லையாயினும், உண்டு பழகிய பழக்கம் அவரை வாட்டத் தொடங்கிற்று. யாராவது வேலையாள் அப்பக்கம் வந்தால் ஏதாவது பான மாவது கேட்கலாமென்று அங்குமிங்குமாக அவர் பார்த்துக்கொண்டிருந்தார். சுமார் ஆறுமணிக்கு ஒரு வேலையாள் அப்பக்கம் வந்தான். அவனைத் தனவந்தர் அழைத்துத் தமக்கு ஏதாவது பானம் கொண்டுவந்து கொடுக்கும்படி வேண்டினார். ஆனால், அவ்வேலையாள் வைத்தியரின் உத்தர

வின்றித் தான் எதுவும் கொடுக்க இயலாதென்று சொல்லிச் சென்றான். தனவந்தர்க்கு உண்டான கோபத்திற்கு அளவில்லை. என்செய்வார் அவர்! தாம் கொடுத்த வாக்குறுதிக்கு அடங்கி, வைத்தியரின் வருகையை எதிர்நோக்கி இருக்கவேண்டியவரானார்.

வைத்தியர் தாம் வாக்களித்த விதம் ஏழுமணிக்கு வந்து தனவந்தரை உண்டிகொள்ள அழைத்தார். தனவந்தர்க்குக் கோபம் பெரிதும் இருந்ததாயினும், உணவின்மேலிருந்த ஆவலால் எதுவும் கூறாது, இரண்டு ஆட்களின் உதவியால் அவருடன் உட்சென்றார். ஒரு வேலைக்காரன் இரண்டு தட்டுக்களைக் கொண்டுவந்து அவர் முன் வைத்தான். அவைகளில் மூன்று ரொட்டித் துண்டுகளும், இரண்டு பழங்களும், கொஞ்சம் தண்ணீரும் இருந்தன. பெரிய விருந்தை எதிர்நோக்கி இருந்த தனவந்தருக்கு இவ்வுணவு பெருங்கோபத்தை உண்டாக்கிற்று. அவர் கோபத்திற்கு இரையாக வல்லார் அங்குயாரும் இல்லாமையால், அது தானே அவிந்தது. மிக்க வருத்தத்தோடு அவர் அவைகளை உண்டு தண்ணீரைப் பருகினார். பின்னர் இரண்டு ஆட்கள் வைத்தியரின் ஏவலால் அவரை ஓர் அறைக்குக் கொண்டுசென்றனர். அங்குத் தரையில் ஒரு படுக்கையைத் தவிர வேறு

ஒன்றும் இல்லை. அப்படுக்கையைக் கண்டதும் தனவந்தர், "இதுவா என் படுக்கை?" என அவ்வாட்களைக் கேட்டார். அவர்கள், "பெரியீர், யாங்கள் என் செய்வோம்! வைத்தியர் ஏவியவிதம் உம்மைக் கொண்டுவந்து இங்குச் சேர்த்தோம். எங்கள்மீது பிழையில்லை" எனக் கூறிக் கதவை மூடிக்கொண்டு வெளிச் சென்றார்கள். அன்று இரவினை அவர் அதிக வருத்தத்தோடு அங்குக் கழித்தார். பாவம்! அவர் தரையில் படுத்தறியார்.

மறுநாட் காலை, வைத்தியர் அவரைக் காலை உணவு கொள்ளும்படி அழைத்தார். தனவந்தர் தம் வருத்தத்தை வெளியில் காட்டாமல், வேலையாட்களின் துணைகொண்டு, உணவு கொள்ளும் இடத்திற்குப் போய் உணவு கொண்டார். நாளுக்கு நாள் உணவு மாறிக்கொண்டிருந்ததோடு குறைந்த அளவினதாயும் இருந்தது.

இவ்விதம் பல நாட்கள் சென்றன. ஒவ்வொரு நாளும் வைத்தியர் தனவந்தர்க்குப் பலவிதமான சமாதானம் சொல்லிக்கொண்டேவந்தார். ஒரு நாள், வைத்தியர் அவரை இரும்பினால் அமைக்கப் பெற்ற ஓர் அறைக்குக் கொண்டுபோய்ச் சிறிது நிற்கும்படி சொன்னார். அதற்குத் தனவந்தர், நிற்றற்குரிய நிலையில் தம் உடல்நிலை இல்லை என்று பதிலளித்தார். அதன்மேல் அவர் தனவந்தரைச் சுவர்மீது சாய்ந்துகொண்டு நிற்கும்படி

கூறினர். அவ்விதமே அவர் வைத்தியர் துணை கொண்டு சுவர்மீது சாய்ந்துநின்றார். உடனே அவர் கதவை மூடிக்கொண்டு வெளிவந்து அவ்வறையின் தரையை மின்சார உதவிகொண்டு சூடாக்கினர். தனவந்தர் நிற்கமுடியாது வருந்தினர். 'ஓ!' என்று கத்தினர். ஒருவரும் வரவில்லை. இதற்குள் தரை சிறிது சிறிதாகச் சூடுபெற்று அவர் கால்களைத் தாக்கிற்று. சூட்டின் வேகத்தைப் பொறுக்கமுடியாது தனவந்தர் கதறினர்; வைத்தியரையும் மற்றவரையும் திட்டினர். ஒன்றும் பயன்படவில்லை. முதலில் நிற்க முடியாதென்று எண்ணியவர் அங்குமிங்குமாகக் குதித்து ஓடினர்; கதவைத் திறக்கும்படி வைத்தியரையும் மற்றவரையும் கூவி அழைத்தார்; கடைசியில் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தார். அவரை ஒரு துவாரத்தின் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்த வைத்தியர் ஆட்களை அழைத்து, அவரை ஒரு படுக்கையில் அமர்த்தும்படி கட்டளை இட்டார். தரையும் சிறிது சிறிதாகக் குளிர்ச்சி அடைந்தது. உணவின் திறத்தாலும், உறுப்புக்கள் அசைவு பெற இறுதியில் செய்த செயலாலும் தனவந்தர் கீல்வாதம் நீங்கிற்று. அன்று இரவு வைத்தியர் தனவந்தர்முன் தோன்றவில்லை.

மறுநாட் காலை, தனவந்தரின் ஆட்கள் வந்தார்கள். அவர் வைத்தியரிடம் விடைபெறுமலே

ஓடிச்சென்று வண்டியில் அமர்ந்து வேலையாளை வண்டியைச் செலுத்தும்படி கட்டளையிட்டார். சிலநாட்களுக்குள் தனவந்தர் உடலின் பருமன் பாதி குறைந்து விட்டது. நோயும் நீங்கிற்று. திண்டிவனம் இராமலிங்கத்தின் வைத்தியத்தால் தம் உடம்பு அந்நிலையைப் பெற்றதென்பதை அவர் எண்ணவே இல்லை.

மூன்று மாதங்களுக்குப் பிறகு, வைத்தியர் இராமலிங்கம் தனவந்தரிடமிருந்து தாம் செய்த வைத்தியத்திற்குத் தக்க பொருளை வாங்கிக் கொண்டு வரும்படி ஒருவரை அனுப்பினர். அவர் தனவந்தரை அடைந்து, வைத்தியர் கூறியதைக் கூறினர். தனவந்தர் பெரிதும் கோபமுற்று, "ஐயா, உன் வைத்தியர் என்னைப் படுத்திய துன்பத்திற்கா பணம் வேண்டும்! அவரைச் சும்மா விட்டது போதாதா?" எனக் கடுகடுத்துக் கூறினர். அவர் தனவந்தரை நோக்கி, "பெரியீர், யான் சொல்வதைச் சிறிது செவி கொடுத்துக் கேட்கும்படி உம்மை வேண்டுகின்றேன். வைத்தியர் உமக்குக் கொடுத்த துன்பமெல்லாம் உம் நன்மையின் பொருட்டே. அவர் நீர் வழக்கமாகக் கொள்ளும் உணவை மாற்றுவிடின், உம் உடல் இந்நிலையை அடையுமோ? அறையில் உம்மை நிற்கவைத்துத் தரையைச் சூடாக்காவிடில் உம் உறுப்புக்கள்

நன்கு இயங்கும் நிலையைப் பெற்றிருக்குமோ? இவைகளைச் சிறிது நீர் சிந்தித்தல்வேண்டும்" என மிகவும் மரியாதையாகக் கூறினார். அவ்வுரைகளைக் கேட்டதும் தனவந்தர் உண்மையை உணர்ந்து, வைத்தியர் இராமலிங்கத்திற்கு இருநூறு ரூபாயும் சில பரிசுகளும் அனுப்பினார். அந்நாள் வரையிலும் அவரை நிந்தித்துவந்தமைக்கு அவர் பெரிதும் வருந்தி, ஒரு மன்னிப்புக் கடிதமும் அவருக்கு எழுதி அனுப்பினார்.

மக்களாய்ப் பிறந்த நாம் கவனத்தைச் செலுத்தி, தகுந்த உணவைக் குறைந்த அளவில் உண்டு, நம் உடலை நோய்களினின்று காத்துக் கொள்ளுதல்வேண்டும் என்பதை இவ்வரலாறு நன்கு விளக்குகின்றது. ஆனால், "உடல்மீது அதிக கவனத்தைச் செலுத்துவார் நோய் வாய்ப்பட்டு வருந்துவர்" என மனோ தத்துவ சாத்திரிகள் கூறுகின்றார்கள்.

ஆதலின், கால தேசங்களை அனுசரித்து, தத்தம் உடலுக்கு ஏற்ற உணவைப் போதுமான அளவு உட்கொள்வார் உடல் நோயின்றி வாழ்வர். அங்ஙனம் நோயற்ற உடல் அமையப் பெற்றார், தம்உடலைத் துணையாகக் கொண்டு அறிவுநூல்கள் கற்று, பெருமுயற்சியினால் இறுதியில் ஞானமுற்று மனநோயையும் அகற்றிக் கொள்வர்.

13. நாடகக் கலை

இவ்வுலகில் நாடகக் கலை எப்பொழுது தோன்றிற்றென்றுவது, எவ்விடத்தில் தோன்றிற்றென்றுவது அறுதியிட்டுக் கூறல் இயலாது. பழைமையான நாடுகளுள் ஒவ்வொன்றும் தன்னிடத்திலேதான் இக்கலை தோன்றியிருத்தல்வேண்டுமெனக் கருதுகின்றது. உலகில் எங்கெந்த நாடுகள் மாந்தர்தம் முயற்சியால் செழிப்புற்றிருந்தனவோ அந்தந்த நாடுகளிலெல்லாம் இக்கலை இடம்பெற்றிருத்தல் வேண்டும். இக்கலை எங்கு எப்பொழுது தோன்றியிருப்பினும் இருக்க. அந்தந்த நாடுகளின் பழக்கவழக்கங்களுக்கு ஏற்றவாறே கதைகளும் கருத்துக்களும் அமைந்தன. சிற்சில உண்மைகள் நூல்களுள் அமைத்திருத்தலைக்கொண்டு, 'இக்கருத்து இங்கிருந்து அங்குச் சென்றது' என்றுவது, 'அக்கருத்து அங்கிருந்து இங்குவந்தது' என்றுவது கூறுதல் அழகன்று. நிரந்தரமான உண்மைகள் யாண்டும் தோன்றும். அவைகளைக்கொண்டு பழைமையையும் இடம் முதலியவற்றையும் ஆராய்தலில் பயனில்லை. இவ்வாராய்ச்சியால் பெறநிற்கும் பயனும் சிறிதே.

ஆங்கிலம் முதலிய பிறமொழிகளில் நாடக நூல்கள் எண்ணிறந்தன. ஆனால் நம்மொழியிலோ, அவை எண்ணிவிடும் நிலையில் இருக்கின்றன. நாம் பேசுகின்ற அளவு காரியங்கள் செய்வதில்லை. ஆங்கிலம் படித்த சிலர் அம்மொழியிலுள்ள சிலநாடகநூல்களை மொழிபெயர்த்தனர். அன்னார்க்கு நம் நன்றி என்றும் உரியதாகுக. அந்நூல்கள் பிறநாட்டுப் பழக்கவழக்கங்களையே உருவாகக் கொண்டனவாதலான் அவை நம் மக்கட்குப் பெரிதும் பயன்படுவதில்லை. ஆங்கில நாடுகளில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்ற நாடகங்களில் சில நம் நாட்டு மக்களால் வெறுக்கப்படுகின்றன. ஆதலின், தமிழும் ஆங்கிலமும் நன்கு கற்ற அறிஞர் ஆங்கில மொழியிலுள்ள நாடகங்களில் பொருந்திய நாடகப்போக்கினையும், அரிய கருத்துக்களையும் உட்கொண்டு, நம் மரபிற்கு அமைந்த முறையில் நாடகங்கள் பல எழுதுவாராயின், அவர்தம் அரிய நூல்களாம் அணிகளை நம் தமிழ்த்தாய் விரும்பி அணிவாளன்றோ! இந்நாள் ஆழ்ந்த கல்வியும் நல்லுணர்ச்சியும் அற்ற சிலர், மக்களுக்கு ஒரு வகை இழிவான இன்பத்தை அளிக்கும் நாடகங்களை இயற்றித் தமிழ் மொழிக்கும் மக்கட்கும் ஊறுசெய்கின்றனர். பணமென்னும் பேயால் தூண்டப்பெற்று அவர் அச்செயல் செய்கின்றனரேயன்றி, வஞ்சகத்தாலன்று.

தலைவனும் தலைவியும் சிறப்புற்று நிற்கும் நாடகம் ஒருவிதம். தலைவன் ஒருவனே சிறப்புற்று விளங்கும் நாடகமே பல. சில நாடகங்களில் இரண்டுபகுதியினர் அமைவர். இருவர் நாடகத் தலைவராய் அமைகின்ற நாடகங்களும் உண்டு.

பொதுவாக நாடகங்கள் 'துன்பியல் நாடகம்', 'இன்பியல் நாடகம்' என இருவகைப்படும். இன்பமான முடிவைப்பெறும் நாடகம் இன்பியல் நாடகமென்றும், தனிப்பட்ட இடரினால் மாண்ட பெருநிலையிலிருந்த ஒருவன் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவது துன்பியல் நாடகமென்றும் கூறப்படும். வறுமையாலும் நோயாலும் துன்பப்பட்டு மாண்ட ஒருவன் வரலாற்றைக் கூறுவதும் துன்பியல் நாடகத்துள் அடங்கும் என்பர் சிலர். அரச பதவியிலிருந்து எதிர்பாராத நிகழ்ச்சியால் நீக்கப்பெற்றுப் பலநாள் துன்புற்று இறப்போன் வரலாற்றைக் கூறுவதும் துன்பியல் நாடகம் என்பர் வேறு சிலர். எதிர்பாராத நிலையில் பெருஞ் செல்வத்தை இழந்த ஒருவன் வரலாற்றைக் கூறுவதும் துன்பியல் நாடகம் என்பர் மற்றுஞ் சிலர். எனினும் ஆழ்ந்து நோக்கின், தனிப்பட்ட இடரினால் மாண்ட பெருநிலையிலிருந்த ஒருவன் வரலாற்றைக் கூறும் நாடகத்தின் சிறப்பை மற்றவை பெறா. நாடகத்தில் குறிக்கப்பெறும் வரலாறு நடந்ததாக இருக்கவேண்டுவதில்லை. கவி

ஞர் படைப்பனவெல்லாம் ஒரு வகையில் நடந்தனவே.

இன்பியல் நாடகத்தைப் பார்க்கிலும் துன்பியல் நாடகமே மக்கள் மனத்தைப் பெரிதும் பண்படுத்தும். பயன் தரும் முறையில் இன்பியல் நாடகம் படைத்துவிடல் எளிய காரியம். ஆனால், துன்பியல் நாடகங்களைப் படைத்தற்குப் பெருவன்மை வேண்டும். நாடக ஆசிரியன் தலைவனை மாள்வித்து, படிப்போன் மனத்தே ஓர் உண்மையைத் தோற்றுவிக்கின்றான். நூல் முழுதும் தலைவனுடைய தூய தன்மையினையும் அரிய குணத்தையும் கூறிக்கொண்டே வந்து, தலைவன் உயிரை ஆசிரியன் போக்குவானாயின், படிப்போன் மனம் குழம்பிவிடும். தலைவன் இறப்பால் படிப்போன் மனத்தே தோன்றும்படி அமைக்கப்பெற்ற கருத்துப் பயனற்றுப்போகும். ஆதலின், ஆசிரியன் தான் படைத்த தலைவனைத் தான் கொல்லுவதற்கு முன்னே அத்தலைவனுக்குச் சில குறைகளைப் படைத்தல்வேண்டும். உண்மை வரலாற்றை எழுதுகின்ற பொழுதும் நாடக ஆசிரியன் தன் கருத்து விளக்கமுறுதற்குரிய முறையில் சில கருத்துக்களைப் படைத்துக் கொள்ளலாம். ஆனால், அக்குறைகள் தலைவனை இழித்துக் கூறப் பயன்படல் ஆகாது. இவ்விதம் அமையும் நாடகம் இயற்றல் எளிய காரியமன்று.

பெரும்பாலும் நாடக ஆசிரியர் தம் வாழ்வில் கண்டு அனுபவித்தவைகளையே நாடகப் பாத்திரங்கள் மூலம் வெளியிடுவர். ஆனால், ஜகப்பிரியர் நாடகங்களிலிருந்து அவர் கொள்கைகளை அறிய இயலவில்லை. ஆசிரியரின் கொள்கைகளை வெளியிடாமல் நாடகத்திற்காகவே நடிக்கும் வன்மையை அவர் நாடகப்பாத்திரங்கள் பெற்றுள்ளன போலும்!

நாடக நூலுள் செய்யுளும் உரைநடையும் இடம்பெறல் வேண்டும். செய்யுளாலேயே இயற்றப்பெறும் நாடகநூல் பொது மக்கட்குப் பெரிதும் துணை செய்யாது.

மிகச் சிறந்த முறையில் நாடகநூல்கள் அமையினும், அவைகளை ஏற்று நடிக்கும் நடிகர் சிறப்புற நடிக்காவிடில் அந்நாடகங்களால் கவிஞர் மக்கள் உணரும்படி நாட்டிய கருத்துக்கள் விளங்கா. ஆதலின், நடிகர்களைப் பயிற்றும் சூத்திரதாரிகள் பல முறைகளை அனுசரித்தல்வேண்டும்.

சூத்திரதாரி, முதலாவது, நாடகத்தைப் படித்துக் கதைத் தொடர்ச்சியை நன்கு உணர்தல்வேண்டும். பின்னர், அந்நாடகத்தால் கவிஞர் மக்கட்கு உணர்த்த எண்ணியது யாது என்பதை ஐயமின்றி உணர்தல் நன்று. நாடகத்தில் உச்சநிலை எந்த அங்கத்தில் அமைகின்றதென்பதை அறிந்துகொள்ளுதல் நாடகத்தைச்

சிறப்பாக நடத்திவைப்பதற்குப் பெரிதும் துணை செய்யும்.

எவ்வித நாடகமாயினும் அதற்கு இசைக் கலையின் துணை வேண்டற்பாலதே. ஆனால், நாடகத்தின் முழுமைச் செம்மைக்குத் துணை செய்யும் அளவுதான் அஃது ஆக்கம் பெறுதல் வேண்டும். நாடகத்துள் இசை தக்க இடங்களில் அமையாவிடில் பயன் இல்லை. நம் தமிழ் நாட்டில் இந்நாள் இசைக்கலைக்குத் துணை செய்யவே நாடகங்கள் நடக்கின்றன. பிரசவ வேதனையுறும் ஒருத்தி இசையில் பிழையின்றித் தாளம் போட்டுக்கொண்டே பாடுவாள். சந்திரமதி புலம்பலிலும் இசையுண்டு; தாளமுண்டு. வாயிலில் நிற்போனை அறிவிக்க வரும் காவலாளன் இசைக்கலையின் துணைகொண்டே ஒரு பாட்டுப் பாடுவான். அழுகையிலும் பாட்டு, சிரிப்பிலும் பாட்டு, பேச்சிலும் பாட்டு, வாதத்திலும் பாட்டு, எங்கும் பாட்டே! என்னே நம் தமிழ் நாட்டு நாடகங்கள்!!

நடிக்க இருப்பார் மனநிலைக்கேற்றவாறு நாடகப் பகுதிகளை அவர்க்கு அளித்தல்வேண்டும். நடிகர் எல்லோரும் நாடகத்தின் தொடர்ச்சியை நன்கு உணரும் விதம் சூத்திரதாரி முதலில் மொழிதல் நன்று. கதையின் முழுத்தொடர்ச்சியையும், கவிஞர் அக்கதையால் அறிவிக்கும் உண்மை

யையும் நடிகர் அறியாவிடில் அன்னார் சிறந்த பாவத்தோடு நடிக்க இயலாது. நடிகர்களைப் பழக்குகின்ற காலத்தில் நாடகப் பாத்திரத்திற்குத் தகுதியற்றவராக ஒருவர் காணப்பட்டால், அப்பொழுதே அவரை நீக்கிவிடல்வேண்டும். நடிகர்களை விலக்குதலிலும், ஒருவர் கொண்ட பகுதியை மற்றவர்க்கு மாற்றுதலிலும் சூத்திரதாரி பிறர் சொல்கேட்டு நடத்தல் கூடாது. நடிகர்கள் பொருளை மனத்திற்கொண்ட பிறகு அவர்களைத் தனித்தனியாகவும் தொகுதியாகவும் பழக்குதல் நன்று. நாடகத்தில் உபயோகிக்கப்போகும் பொருள்களையும் முன்னரே அவர்கள் உபயோகித்துப் பழகல்வேண்டும்.

நடிகர்கள் சொற்களைச் சரியாக உச்சரிக்கும் விதத்திலும் அவர்களைப் பழக்குதல் நன்று. சொற்களின் உச்சரிப்புக் கெடுமாயின் பொருளும் கெடும். வாக்கியங்களையும் சொற்களையும் எடுத்துக் கூறவேண்டுபவைகளை எடுத்தும், படுத்துக்கூற வேண்டுபவைகளைப் படுத்தும் கூறுதற்குரிய பயிற்சி நடிகர்களுக்குப் பெரிதும் வேண்டும்.

திரைகளும் மற்றவைகளும் கதை நடந்த காலத்திற்குப் பொருத்தமாக அமைதல்வேண்டும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த செய்தியைக் கூறும் நாடகத்தை நடிக்கும் பொழுது இருபதாவது நூற்றாண்டில் கண்டு

பிடிக்கப்பட்ட பொருள்களையும் உபயோகிக்கும் பொருள்களையும் கதைத் தொடர்ச்சியில் சேர்த்தல் ஆகாது. சந்திரமதியாக நடிக்கும் பெண்களில் சிலர், கையில் கடிகாரமும், அந்நாள் நம்மவர் அணியா அணியும் உடையும் அணிந்து கொண்டு மேடையில் தோன்றுவர். இவ்விதக் காலத்திற்குப் பொருந்தாத பொருள்களால் நாடகத்தின் சுவை கெடும்.

நாடகக் கலையின் நிலை நாகரிகம் பெற்ற மற்ற நாடுகளைப் பார்க்கிலும் நம் தமிழ்நாட்டில் மிகவும் வருந்தத்தக்க நிலையில் இருக்கிறது. அறிஞர் இக்கலையில் தம் கருத்தைச் செலுத்தி, நாட்டிற்கும் மொழிக்கும் ஏற்றமளிப்பாராக.

14. கவிஞரும் வீரரே—திருவள்ளுவர்

உலகிடைத் தோன்றும் வீரர் காலத்திற்கேற்பச் செய்யும் தொழிலால் படை நடத்தும் தலைவரென்றும், நாடு புரக்கும் அரசரென்றும், உலகமுழுதும் போற்றற்குரிய கவிஞரென்றும் தீர்க்கதரிசியர் என்றும், அரியன பகரும் சிந்தனையாளர் என்றும், மக்களைக் கடவுள் வழிபாட்டிற் செலுத்தும் குருமார் என்றும் மக்களால் கருதப்படுகின்றனர்.

கவிஞனும் வீரன் தான் செய்யும் தொழிலால் எல்லாக் காலங்களுக்கும் உரியவனாகின்றான். உயிரற்ற பொருளற்ற செய்யுட்களைப் பாடுபவன் சிறந்த கவிஞனல்லன். படைக்கலங்கொண்டு போர்புரியும் படைத்தலைவனைப் பாடும் கவிஞன் வீரக்கவிஞனாய் இலனேல், அவனைப்பற்றித் திறம்படப் பாடலியலாது. வீர ஆன்ம கவிஞனிடம் தீர்க்கதரிசி, விதியமைப்போன், இராசதந்திரி, சிந்தனையாளன் முதலியோர் நிலை அமைந்திருக்கும். திருவள்ளுவர் தீர்க்கதரிசியராய் இறைவனை அடையும் வழியைக் கூறுகின்றார்; விதியமைப்போராய் உலகைக் காக்கும் முறைகளை அமைக்

கின்றூர்; இராசதந்திரியராய்ப் பகைவரை வெல் லும் முறைகளைப் பகர்கின்றூர்; சிந்தனையாள ராய்ச் சிந்திக்க அரியன வரைகின்றூர். அவர் கூருது விட்டனவும் உளவோ?

நம் நாட்டிலிருந்த சில கவிஞர்களுக்கு வாய்ப் பின்மையால், பல செயல்கள் செய்ய இயலாமற் போயிற்று. வீர ஆன்ம கவிஞனும் போற்று வார் இல்லையாயின், யாது செய்ய இயலும்? இயற்கை எல்லோர்க்கும் துணை செய்வதில்லை.

தீர்க்கதரிசியர், கவிஞர் ஆகிய இவர்களிடந் தான் உலக இரகசியமானது ஒப்படைக்கப்பட் டிருக்கின்றது. இவர்கள் அறிந்து கூறும் இரக சியம் யாவரும் அறியத்தக்கதொன்றே. ஆனுல், அவ்வுண்மையை அறியவேண்டும் என்னும் முயற்சி இன்மையால், மக்கள் அதனை அறிய இயலவில்லை. கவிஞரும் தீர்க்கதரிசியரும் உலக இரகசியத்தை வெளிப்படுத்தவே அனுப்பப் பெற்றவர். உலக இரகசியத்தில் வாழ்பவரும் அவரே. அவரினும் உண்மையாளர் உலகில் இருத் தல் அருமை. இவ்வுலக இரகசியம் நாம் அறியும் நிலையில் இல்லையாயினும், இதனை அறியவேண்டும் என்னும் எண்ணமாவது நம்பால் இருத்தல் நன்று.

தீர்க்கதரிசியர் நாம் என்ன செய்யவேண்டும் என்பதைக் கூறுகின்றனர். கவிஞர் நாம் எவற்

றிடம் அன்பு கொள்ளவேண்டுமென்பதைப் பகர்கின்றனர். யாண்டும் அழகுண்டு. கரடுமுரடான இடத்திலிருந்து அழகான செடிகள் தோன்றுகின்றன. அவைகளில் தோன்றும் மலர்கள் நம் கண்களைக் கவர்கின்றன. ஆதலின், பூமிக்குள்ளும் ஏதோ அழகுள்ள பொருள் இருக்கின்றதென்பது வெளியாகின்றது. பொருள்களின் வெளித்தோற்றத்திலிருந்தே எதுவும் சொல்ல இயலவில்லை. நன்மையைவிட அழகு சிறந்தது. ஆனால், அழகில் நன்மை அமைந்திருக்கின்றது. ஆதலின், அழகைக் காணும் கவிஞன் நிலையில் நன்மையைக் காணும் தீர்க்கதரிசி அமைகின்றான்.

கவிஞர் பலரை நாம் அறிவோம். அன்னார் குறையற்றவர் என்பதே நம் எண்ணம். அவர் செய்யுளில் குறைகாணல் ஒரு விதத் துரோகமாகத்தான் தோன்றுகின்றது. சிறிது ஊன்றி நோக்கின், 'இது சரி; இது தவறு' என்று சொல்லுவதே வெறு மாயை எனத் தோன்றுகின்றது. மனிதர் எல்லோரிடத்தும் ஓரளவு கவிதா சக்தியுண்டு. செய்யுட்களைப் படித்து அவைகளின் பொருள்கண்டு இன்புறுவோரெல்லாம் கவிஞரே. ஈண்டு நம் திருவள்ளுவர் செய்யுள் ஒன்றைக் கவனிப்போம்:

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது." (29)

'துறவு, மெய்யுணர்வு, அவாவின்மை முதலிய நற்குணங்களாகிய குன்றின் முடிவின்கண் நின்ற முனிவரது வெகுளி, தான் உள்ள அளவு கணமேயாயினும், வெகுளப்பட்டாரால் தடுத்தல் அரிது' என்றார் பரிமேலழகர்.

'குணமென்னும் குன்றின்மேல் ஏறி நின்றாரிடத்துப் பிறக்கும் கோபமானது, அவரிடத்து ஒரு கணப்பொழுதுகூடத் தங்குதல் அருமை' என்றார் மற்றொருவர்.

குணமென்னும் குன்றின்மீது நிற்பாரிடத்திருந்து பிறக்கும் கோபத்திலிருந்து பிறர் தப்பித்துக்கொள்ளல் இயலாது என்பதே பரிமேலழகர் கருத்து. இச்செய்யுள் நீத்தார் பெருமை என்னும் அதிகாரத்தில் இருத்தலால், இதற்கு, பெரியார்க்கும் சில பொழுது கோபம் பிறக்கும் எனவும், பிறந்த அக்கோபம் அக்கணமே கெடும் எனவும் கருத்துப்பட மற்றொருவர் பொருள் கூறினார். கோபத்தை அடக்கிக்கொள்ளுதலே நீத்தார்க்குப் பெருமையேயல்லாமல், கோபம் தம்மைக் கடந்துபோக விடுதலன்று. இக்கருத்தே சிவப்பிரகாசரும் கொண்டிருத்தலைக் கீழ் வரும் செய்யுள் நன்கு உணர்த்தும்.

"உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளம்
தடுத்த லரிதோ தடங்கரை தான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு."

மேற்குறிப்பிட்ட இருவரும் கவிஞரின் கருத்தை இரண்டு விதமாகக் கருதினர். ஆனால், கவிஞர் கருதியது இவ்விருவருள் ஒருவர் கருத்தோ, அல்லது இவ்விருவர் கருத்தினும் வேறானதோ? எஃது எவ்வாறாயினும், ஆகுக. ஒவ்வொருவரும் சரியாகவோ பிழையாகவோ தத்தம் கருத்தையே அச்செய்யுளில் கண்டனர். ஆதலின், அச்செய்யுளை நுகர்ந்த ஒவ்வொருவரும் கவிஞர் அல்லரோ?

எந்த மனிதன் தன்பாலுள்ள கவிதா சக்தியை அதிகமாக வளர்க்கின்றானோ, அவனையே மக்கள் 'கவிஞன்' என்று வழங்குகின்றார்கள். எந்தக் கவிஞன் மற்றக் கவிஞர்களைவிடச் சிறந்தவனாகப் பெரியோர்களால் போற்றப்படுகின்றானோ, அவனே உலகக் கவிஞனாகின்றான். அக்கவிஞனே வீர ஆன்ம கவிஞனாவான். ஆனால், எல்லாக் கவிஞர்களுக்கும் உலகத்தொடர்பு உண்டு. ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு கவிஞன் சிறப்பை அடைகின்றான்.

கவிதையாவது யாது? முன்னையோர் கட்டுக்கடங்கிப் பாடப்படும் பாட்டா கவிதை? அன்று! ஆன்மாவின் தூண்டுதலால் எழுந்த, நிரந்தரமான அமைதியில் மக்களைச் சேர்க்கும் கருத்தே கவிதை. அந்நிலையில் ஆன்மாவும் உடலும் சொற்களும் கருத்துக்களும் நன்கு பிணிக்கப்

பெற்று வாக்கியங்கள் இசையுற எழுகின்றன. அக்கருத்துக்கள் உரை நடையிலாயினும் பாட்டிலாயினும் அமையலாம், செய்யுள் உருவம் ஏற்றன எல்லாம் கவிதையாகுமா? ஒருவன் தன் உண்மையாலும் கருத்தின் ஆழத்தாலும் சிறந்த கவிஞனாகின்றான்.

திருவள்ளுவர் கவிக்கரசர். அவர் தமக்குரிய அரச பாதையில் நின்றனர். எத்தனையோ வகை உலக மாறுதலுக்கிடையில் அவர் புகழ் குன்றின் மேலிட்ட விளக்கென நிற்கின்றது. எத்தனை யோ நூல்கள் திருவள்ளுவர் திருக்குறளைப்பற்றி எழுந்தன. அவைகள் கூறிய முடிவோ இன்னும் முடிந்த முடிவாகவில்லை.

உலகம் போற்றும் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரின் வரலாறு நாம் அறியத் தக்க தொன்றாய் இல்லை. அப்பெரியார் ஆதி என்னும் புலைச்சிக்கும் பகவன் என்னும் அந்தணனுக்கும் பிறந்தாரென ஒரு கதை வழங்குகின்றது. ஆராய்ச்சியாளருள் சிலர் அவர் அரச குலத்தவ ரென்றும், வேறு சிலர் அந்தண குலத்தவரென் றும் கூறுகின்றனர். அவர் வரலாறு இவ்விதம் இருப்பினும், அவர் உருவமேனும் சரியாக அமைக்கப் பெற்றிருக்கின்றதோவெனின், அதுவும் இல்லை. அவர் உருவமெனச் சில படங்களும் சிலைகளும் காணப்படுகின்றன. அவை

களில் தோன்றும் திருவள்ளுவரின் உருவத்தில் சித்திரித்த தாடியும் மீசையும் அழகுபெறக் கட்டிய தலைமுடியும் காணப்படுகின்றன.

'மழித்தலு நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின்' (280)

எனக் கூறியார்க்கு இவை பொருந்துமோ?

சிந்தனையின் எல்லையைக் கண்ட நாயனுர்க்கு அமைக்கப்பெற்ற உடல் போற்றும் அளவினதாய் இல்லை.

'பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்' (349)

என்றும்,

'பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு' (350)

என்றும் கூறிய நாயனுருக்கு ஞான ஒளி இல்லா முகம் அமைத்தமை வருந்தற்பாலதே. பின்னும், உருவத்தில் பல குறைகள் காணப்படுகின்றன. அவற்றையெல்லாம் விரிக்கின் பெருகும். வாழ வழிகூறிய வித்தகர் பலருள்ளும் தலை சிறந்தவரான திருவள்ளுவர் உருவத்தினைப்பற்றிப் பெரியார் சிறிது சிந்திப்பாராக.

திருவள்ளுவர்க்குக் கவிச் சமயமேயன்றி வேறு சமயமில்லை. வாழ்வாங்கு வாழ்தற்கு வழி கூறும் சமயமே கவிச் சமயம். அச்சமயத்தில்

உலக நிரந்தரமான உண்மையெல்லாம் இடம் பெறும்.

அதனுல்தான் நம் வள்ளுவரை எம்மதத்தினரும் தம் மதத்தினர் எனக் கொள்கின்றனர். இக்கூற்றின் அடியில் நிரந்தரமான உண்மையுண்டு. ஆனுல், இது விருப்பு வெறுப்பற்று நோக்குவார்க்கே இனிது புலனுகும்.

திருவள்ளுவர் மிகப்பெரியார்; அவர் பெயர் உலகெங்கும் பரவி இருத்தலால் அன்று; அவர் உலக ஆழத்தில் இருத்தலால்.

'நத்தம்போற் கேடும் உளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது' (235)

எனவும்,

'ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு' (354)

எனவும் எழுந்த வாசகங்கள் நாயனுர் உலக ஆழத்தில் நிற்றலை வெளிப்படுத்தும்.

திருவள்ளுவர் வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்தவர். அவர்க்கு வடநூலார் கொள்கையில் பெருமதிப்புண்டு. திருக்குறளில் ஆரியர் நாகரிகம் இடம் பெற்றிருத்தலை நடுநிலை நின்று ஆய்வோர் காண்பர். தமிழர்க்குக் கருத்துக்களை வெளியிடற்கு அமைந்த பகுப்பு அகம் புறம் என்னும் இரண்டே. ஆனுல், வடநூலார் அமைத்துக்

கொண்ட பகுப்பு அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு. வாக்கு மனம் கடந்து நிற்பது வீடாதலானும், இன்பத்தின் இறுதியில் பெற நிற்பது வீடாதலானும், நாயனுர் வீட்டினையொழித்து மற்ற மூன்றினையே தம் கருத்துக்களை வெளியிடற்கு நிலைக்களமாகக் கொண்டார். பிறர் கொள்கையைத் தழுவும்பொழுதும், நாயனுர் தமக்குகந்த நிலையில் நிற்றலை நோக்குக.

ஆரியர் தர்ம நூல்களெல்லாம் யாகம் செய்தலை உயர்வாகக் கூறுகின்றன. ஆனுல், நாயனுர் அவைகளுக்கு மாருக,

'அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணுமை நன்று' (259)

என வீரருள் வீரராய் நின்று தம் கொள்கையை அஞ்சாது கூறுகின்ருர்.

பேரிடர்ப்பாடான காலத்தில், ஒருவன் நீதி நூல்கள் விலக்கியவைகளையும் செய்யலாமென ஆரியர் ஆபத்தர்மம் கூறுகின்றது. ஆனுல், நாயனுர்,

'இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல்' (961)

எனத் தம் கொள்கையை நிலைநாட்டுகின்ருர்.

வீர ஆன்ம கவிஞராம் திருவள்ளுவர் நிலையை ஒருவாறு கண்டோம். அப்பெரியாரை

இவ்வுலகத்திற்கு ஈந்த தமிழ்நாடு வாழ்க! அவர் கருத்தாம் உயிர்க்கு உடலாய் அமைந்த தமிழ் மொழி வாழ்க!

THE MADURA TAMIL SANGAM

தை. ஆ. கனகசபாபதி முதலியார்
இயற்றிய நூல்கள்

1. மேக தூதம்
2. அரி சிங்கு
3. திருக்கோவையார் இயல்பு
4. மலர் வனம்
5. பல்வகைக் கட்டுரைகள்
6. திருமுருகாற்றுப்படை மூலமும் உரையும்
7. பாலைக்கலி மூலமும் உரையும்(அச்சில்)

Printed at The Jupiter Press, Madras,